# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#951**
**Nov-Dec 2025**

**பொருளடக்கம்**


✡ ஆபத்தை எதிர்கொள்ளுதல்................ 2

✡ நம்முடைய வார்த்தைகள் –
தேவனுடைய வார்த்தைகள் ................ 12

✡ ஆனால் மாறுபட்ட ஒரு நோக்கத்துடன்..... 17



BS Tamil Version - 96

2025

# ஆபத்தை எதிர்கொள்ளுதல்

Facing Danger

**"நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள், உத்தமனுக்குக் கர்த்தர் துணை என்றான்."** (2 நாளா. 19:11).

அப்போஸ்தலனாகிய பேதுரு 'Virtue' தைரியம் என்ற வார்த்தையை 2பேதுரு 1:5-ல் பயன்படுத்துவதைப் போல, தைரியமானது நம்பிக்கை என்ற அர்த்தத்தில் ஒரு உயர்நிலை முதன்மை கிருபை ஆகும்; ஆனால் வீரம்/ துணிவு என்ற அர்த்தத்தில் அது ஒரு இரண்டாம் நிலை கிருபை ஆகும்; அந்த வகையில் இது உயர்நிலை முதன்மை கிருபைகள் ஒருவனைக் கட்டுப்படுத்தும் ஜாக்கிரதையுணர்வு அல்லது பயத்தின் முயற்சிகளை அடக்குவதால் உருவாகிறது. ஆகையால் நமது பாடத்தில் இதனை ஒரு இரண்டாம் நிலை கிருபையாகவே விவரிக்க விரும்புகிறோம். மிகைப்படுத்தப் பட்ட எச்சரிக்கையுணர்வு, பயத்தின் ஆவி, மனித குடும்பத்தில் பலரை எவ்வாறு கட்டுப்படுத்துகிறது என்பதையும், தேவனுடைய ஜனங்கள் அநேகருடைய விஷயத்தில் எப்படி வாழ்நாள் முழுவதும் அதனுடன் போராட வேண்டியதிருக் கிறது என்பதையும் நாம் கருத்தில் கொள்ளும்போது, அதற்கு நேர்மாறான துணிச்சல்/வீரம் என்ற கருத்தில் தைரிய-மானது, தேவனுடைய ஜனங்கள் கற்றுக் கொள்ளவும் மற்றும் நடைமுறைப்படுத்தவும் தகுதியான பாடமாயிருக்கும் என்று அறிந்து கொள்ளப்படும்.

ஆனால் மற்ற பல கிருபைகளைப் போலவே, தைரியத்திலும் போலியானவைகள் உள்ளன, பெரும்பாலும் அவையே அதன் உண்மையான பொருளாகக் கருதப் படுகின்றன. அத்தகைய போலியானவைகளில் ஒன்று 'அதீதத் துணிவாக' இருக்கிறது, அது "தேவதூதர்கள் காலடி வைக்க அஞ்சுகிற இடத்திலும் விரைந்து செல்லும்" இயல்புடைய மனப்பான்மையாகும். மற்றொரு போலி-யானது 'அசட்டுத் துணிவாக' இருக்கிறது; சூழ்நிலையில் உள்ள காரணிகளை, அதாவது, சூழ்நிலையைச் சமாளிக்-கும் திறன், அதன் சிரமங்கள், அதன் ஆபத்துகள், அதன் எதிரான காரணிகள் போன்றவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ஆபத்தான செயல்களை சிந்தனையற்ற முறையில் மேற்கொள்ளும் குணம். மூன்றாவது போலி-யானது 'அனுமானமாக' இருக்கிறது, அதாவது ஆபத்து-களைச் சமாளிக்கும் ஒருவரின் சொந்த திறன்களை மிகைப்படுத்திக் கொள்வது, அது ஒருவன் தன்னை மலை உச்சியிலிருந்து தள்ளி விடுவதைப் போன்றது. அது முட்டாள்-தனமான துணிவுகளுக்கு வெகுமதியாக இயற்கையின் விதிகள் ஒருவரின் நலன்களுக்காக இடைநிறுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறது.

## பயத்தை மேற்கொள்ளும் விசுவாசம்



நிச்சயமாக, இதுபோன்ற ஒரு சோதனையில் நம்-முடைய இரட்சகரின் தெளிவான மனநிலையைக்கொண்-டிருக்காதவர்கள், யதார்த்தத்தின் பாறைகள் மற்றும் கற் களின் மீது விழும்போது அவர்களுடைய மதியீனத்தின் விளைவாகப் பெரிதும் காயமடைகிறார்கள். கோலியாத், பெனாதாத் மற்றும் அப்போஸ்தலர் பேதுரு ஆகியோரின் தற் பெருமையும் மற்றும் அதைத் தொடர்ந்து வந்த அவர்களு-டைய வீழ்ச்சியும் நிரூபிப்பதைப் போல, அது 'தற்பெருமை யான தைரியம்' அல்ல. தெளிந்த புத்தியுள்ள ஆவியை ஓரளவு வளர்த்துக் கொண்ட தேவனுடைய ஜனங்களுக்கு, கொஞ்சம் சிந்தித்தாலே, இவை தைரியத்தின் வெறும் போலிகள் என்று நிச்சயமாகப் புரிந்து கொள்ள முடியும்.

## தைரியத்தின் விளக்கம்

அதீத துணிவு, அசட்டுத் துணிவு, அனுமானம், தற்-பெருமை பேசுதல் ஆகியவற்றை தைரியம் என்று புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று வேதாகமம் கருதவில்லை என்றால், உண்மையில் தைரியம் என்றால் என்ன? இதனை ஆபத்தான சூழ்நிலையின் முன்னிலையில் மனம், இருதயம் மற்றும் சித்தத்தின் நிதானமான, அச்சமற்ற, துணிச்சலான மற்றும் சுயத்தை-மறக்கும் மனப்பான்மை என்று வரையறுக்கலாம். ஒரு சூழ்நிலையில் ஆபத்து இல்லாமலிருந்து, அந்த பொருத்தமான சூழ்நிலையை எதிர்-கொள்ளும் ஒருவரைத் தைரியமானவர் என நாம் நிச்சய-மாக நினைக்க மாட்டோம். உதாரணமாக, உண்பது, குளிப் பது, உடுப்பது, தூங்குவது போன்றவற்றை யார் தைரியமான செயல்கள் என்று நினைப்பார்கள்? அவை தைரியமான செயல் களாகக் கருதப்படாததற்கான காரணம், பொதுவாக ஆபத்து அவற்றுடன் தொடர்புபடுத்தப்படவில்லை என்பதாகும்.

COURTESY BY :
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates: One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

இதன்படி, அச்சுறுத்தும் ஆபத்து தைரியத்தின் ஒரு முன் அனுமானமாக இருக்கிறது, சரியான கோட்பாடுகள் இதைக் கோரும்போது, தைரியம் எப்போதும் ஒரு ஆபத்தான சூழ்நிலையை சந்தேகத்திற்கிடமின்றி எதிர்கொள்ளும். கோலியாத், சவுல், அப்சலோம் போன்றவர்களிடமிருந்து தாவீது எதிர்கொண்ட ஆபத்துகளிலிருந்து தாவீது பின்வாங் காததைப் போலவே, இதுவும், அதிலிருந்து தப்பி ஓடாது, தவிர்க்க முடியாததாக இருக்குமேயானால் அதிலிருந்து பின்வாங்காது. ஆபத்தான சூழ்நிலைகளைப் பற்றிய சிந்தனையைப் பொறுத்தவரை இது மனதின் ஒரு குணமாக இருக்கிறது. இது இருதயத்தின் விருப்பங்களில் ஒன்றாயிருக் கிறது; இது முதன்மையாக, ஆபத்தின் முன்னிலையில் தைரியமாக இருப்பதைத் தீர்மானிக்கும் முதன்மையான ஒன்றாயிருக்கிறது.

மனதில், தைரியம் ஒரு நிதானமான பண்பாக உள்ளது; ஏனெனில் அது ஆபத்து குறித்த ஒருவரின் திறன்களைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. மேலும் அது ஆபத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது; 20,000 வீரர்களுடன் தனக்கு விரோதமாக வரும் எதிரி ராஜாவை தனது 10,000 வீரர்களுடன் சந்திக்க முடியுமா என்று கருதிய ராஜாவைப் போல, எதிரிகளால் ஆபத்து ஏற்பட்டால், அது எதிராளியின் திறன்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து ஒருவரின் சொந்த திறன்களையும் ஆய்வு செய்கிறது. இருதயத்தில், தைரியம் அச்சமற்றதாயிருக்கிறது. இது, பயம், திகில், கலக்கம் அல்லது நடுக்கம் போன்ற ஆபத்து குறித்த உணர்வுகள் கட்டுப்படுத்த அனுமதிக்காது. சித்தத்தில் அது துணிச்ச லானது – அதாவது, ஆபத்தை எதிர்கொள்ளும் சண்டையில் தைரியமாகவும், தற்காப்பு ரீதியாகவும் ஈடுபடுகிறது. சுய-நலமாக பாதுகாக்கப்படுவதைப் பொருட்படுத்தாமல், ஆபத்தில் ஒருவரை தற்காக்க முற்படுகிறது மற்றும் சண்டையில் வெற்றி பெறவேண்டும் என்ற உறுதிதளராத தீவிரம் நிறைந்திருப்பதனால் யுத்தத்தில் வெற்றி பெற கடுமையான மற்றும் பயனுள்ள தாக்குதல்களை மேற் கொள்கிறது.

எனவே, உண்மையான தைரியத்தில் நிதானமின்மை இல்லை. அது ஆபத்தை எதிர்கொள்ளும் போது ஒருவரின் சொந்தத் திறன்களைக் குறைவாக மதிப்பிடுவதோ அல்லது மிகையாக மதிப்பிடுவதோ இல்லை, ஆபத்தையும் குறைவாக மதிப்பிடுவதோ அல்லது மிகையாக மதிப் பிடுவதோ இல்லை, அதனுடன் தொடர்புடைய சிரமங்கள், பகைவர்கள் மற்றும் பிரச்சினைகளையும் குறைவாக மதிப்பிடுவதோ அல்லது மிகையாக மதிப்பிடுவதோ இல்லை. தைரியத்தில் பயம், கலக்கம், நடுக்கம் அல்லது திகில் போன்றவற்றின் அறிகுறி இருப்பதில்லை. ஏனெனில் இவை அதன் இயல்பு மற்றும் அமைப்பிற்கு முரணானவை.

பகைமையுணர்வுடன் செயல்படும் இறுமாப்புடைய தற்பெருமைக்காரரின் முன்னிலையில் தைரியம் பின்-வாங்காது. இரத்தசாட்சியாக மரணத்தை எதிர்கொள்ள ஆவலுடனிருக்கிறேன். ஆம், அதை விருப்பத்துடன் எதிர்கொள்ள தன்னால் முடியும் என்று பெருமையடித்துக் கொண்டு, ஆனால், அதற்கான சூழ்நிலையின் முன்னிலை-யிலோ கிறிஸ்துவை மறுதலித்து தனது சொந்த ஜீவனைக் காப்பாற்றிக் கொண்ட துறவி ஒருவரைப் போல் அது இருக்காது. முழு உலகமும் அவரை மறுதலித்தாலும், கிறிஸ்துவைப் பற்றிய தனது அறிக்கைக்கு விசுவாசப் பற்றுறுதியுடன் நிற்கத் தயாராக இருப்பதாக தன்னையே புகழ்ந்து கொண்ட பெருமை பேசும் பேதுருவைப் போலவும் இது செயல்படாது. சுய-மேன்மைக்காக திரளான ஜனங் களை வியப்பில் ஆழ்த்தி அவர்களின் மனத்தோற்றத்தை ஈர்ப்பதற்கான அதீத துணிவின் முயற்சியாக தன்னைத் தானே ஒரு கோபுர உச்சியிலிருந்து கீழே தள்ளிக் கொள்ளும் அனுமானத்தின் ஒரு துளி கூட, உண்மையான தைரியத்தில் இல்லை. இந்த குணங்கள் அனைத்தும் அதற்கு நேர் எதிரானவை அல்லது போலியானவை. எனவே, இந்த குணங்களில் எதையும் தைரியத்திற்கு உரியது என்று நம்மில் எவரும் தவறாகக் கருதக்கூடாது; ஏனென்றால் அவைகளின் ஒரு பங்கு அதற்கு எதிரானவை மற்றும் ஒரு பங்கு அதன் போலியானவை. ஆபத்தின் முன்னிலையில் நிதானம், பயமின்மை மற்றும் துணிச்சல் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் தைரியத்தின் கூறுகளை நாம் நினைவில் வைத்திருந்தால், அத்தகைய தவறான கருத்துக்களுக்கு நாம் குற்றவாளியாக மாட்டோம்.

## தைரியத்தின் வகைகள்

இப்போது சில சுவாரஸ்யமான தைரியத்தின் வகை-களை ஆராய்வோம். இவற்றில், நான்கு வகைகளைப் பற்றி விசேஷமாகக் குறிப்பிட வேண்டும்: (1) சரீரம், (2) மனம், (3) சன்மார்க்கம்/ஒழுக்கநெறி மற்றும் (4) மதம். இந்த நான்கு வகைகளில் மிகவும் பொதுவானது சரீர ரீதியான ஆபத்தைத் துணிவுடன் எதிர்கொள்ளும் சரீர ரீதியான தைரியம். தேவனுடைய வார்த்தை, சரீர ரீதியான தைரியத்திற்கு சம்கார் (நியாயாதிபதிகள் 3:31) மற்றும் சிம்சோன் (நியாயாதிபதிகள் அதிகாரம் 15) போன்றவர்களின் சிறந்த உதாரணங்களைத் தெரிவிக்கிறது.

மன தைரியம் என்பது மதசார்பற்ற அல்லது மத ரீதியான மன சிரமங்களைத் துணிவுடன் எதிர்கொள்ளும் இயல்-பாகும். சிந்தனையின் முன்னோடிகள் என்பதை நிரூபித்த அனைத்து சிறந்த சிந்தனையாளர்களும் இந்த வகையான தைரியத்தை அவர்களுடைய துறைகளில் வெளிப்படுத்தி-யுள்ளனர். வனாந்தரத்தில் தெய்வீக வெளிப்பாட்டின் இரகசியங்களை ஆராய்ந்த நம்முடைய ஆண்டவர் மன தைரியத்திற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறார். நியாயப்பிரமாணம் மற்றும் கிருபையின் உடன்படிக்கைகள், மனிதனுடைய ஆக்கினைத்தீர்ப்பு, மீட்பு, நீதிமானாக எண்ணப்படுதல் மற்றும் மெய்யான நீதிமானாக்கப்படுதல், கிறிஸ்துவினுடைய இரட்சிப்பின் வேலையின் இரண்டு மாபெரும் வெளிப்பாடுகள் – தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக் கான இரட்சிப்பு மற்றும் இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தல் – போன்றவற்றோடு தொடர்புடைய சிரமங் களுடன், – பவுலின் போராட்டம் மன தைரியத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## சரீர ரீதியான தைரியம்

**உறுதிப்பாடு, சமநிலை மற்றும் விழிப்புணர்வுடன் தொடர்ந்து முன்னேறுவதற்கும்.**

## மன ரீதியான தைரியம்

**திறந்த மற்றும் நெகிழ்வான இணக்கமுள்ள மனதுடன் கற்பதற்கும், கற்றதை மறப்பதற்கும் மற்றும் மறுகற்றலுக்கும்.**

## சன்மார்க்க ரீதியான தைரியம்

**விரும்பத்தகாததாக இருந்தாலும் கூட சரியானதைச் செய்தல்.**

## மத ரீதியான தைரியம்

**தேவனுடைய அழைப்பு மற்றும் நோக்கங்களுக்கு உறுதியுடனும் கீழ்ப்படிதலுடனும் இருந்து அவர் மீதான விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும்போது, பயம், துன்பம் அல்லது ஆபத்தை எதிர்கொள்ளும் பெலன் வேண்டும்.**

லுத்தர் கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும், ரோமன் கத்தோலிக்கத்தின் புண்ணிய கிரியைகளினால் நீதிமானாகுதல் என்ற கொள்கையின் குழப்பங்களின் ஊடாகக் கடந்து விசுவாசத்தினால் மட்டுமே நீதிமானாக்கப்பட முடியும் என்ற தெளிவை அடையும் வரை, கிட்டத்தட்ட மிக உயர்ந்த மன தைரியத்தை வெளிப்படுத்தினார். இதன் மூலம், அவர் ரோமன் கத்தோலிக்க இறையியலாளர்களின் விரிவான கொள்கைகளை கந்தைக்கீற்றுகளாகக் கிழித்து, ரோமன் கத்தோலிக்கர்களின் மரித்துப்போன சடங்குகளிலிருந்து சுவிசேஷத்தை ஜீவனுள்ள புத்துணர்ச்சியுடன் வெளியே கொண்டு வந்தார்.

ஒரு வீரனின் துணிச்சலான செயலால் அவனுடைய, படைத்தலைவன் தனது பணப்பையை அவனிடம் வீசும்படித் தூண்டப்பட்டார். அதில் தங்கம் மட்டுமல்ல, இரண்டு மிகவும் மதிப்புமிக்க வைர மோதிரங்களும் இருந்தன. மிகுந்த உற்சாகத்துடன் பாராட்டும்விதமாக தன்னுடைய படைத் தலைவன் தனக்கு மோதிரங்களை அல்ல, தங்கம்தான் கொடுக்க விரும்பினார் என்று உணர்ந்தான். சன்மார்க்கம்/ ஒழுக்கநெறி தைரியம் அவற்றை படைத்தலைவனிடம் திருப்பிக் கொடுக்கச் செய்தது – ஆம், அவர் உண்மையில், மோதிரங்களை அவனுக்குக் கொடுக்க விரும்பவில்லை. ஆனால் அவற்றைத் திருப்பித் தந்ததில் அவனது மனசாட்சியைப் பாராட்டிய படைத்தலைவன், அதை அவனுக்கு வெகுமதியாகக் கொடுத்தான்.

ஒழுக்கநெறி சார்ந்த தைரியம், மழை பெய்யும்போது வெளியே இருக்கக் கூடாது என்ற தனது தாயின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, தனது தோழர்களை விட்டுவிட்டு வீட்டிற்குச் செல்ல ஒரு சிறுவனைத் தூண்டியது, அவர்கள் அவனது கீழ்ப்படிதலுக்காக அவனைக் கேலி செய்து, தங்கள் சொந்தக் கீழ்ப்படியாமையைப் பெருமைப்படுத்திய போது, "உங்கள் நட்பை இழந்தாலும், நான் கீழ்ப்படியாமலிருக்கவோ, என் தாயை அவமதிக்கவோ மாட்டேன்" என்று அருமையாகப் பதிலளித்தபோது அவன் ஒழுக்க நெறியின் தைரியத்தை வெளிப்படுத்தினான்.

மிக உயர்ந்த வகையான தைரியம் மத ரீதியான தைரியமாகும்! வேதாகமமும் சபை வரலாறும் இந்த வகையான தைரியத்திற்கு நேர்த்தியான அநேக உதாரணங்களை நமக்கு வழங்குகின்றன. சாமுவேல் ஏலிக்கு தேவனுடைய செய்தியை அறிவித்ததில் இதை விளக்குகிறார். தாவீதின் பாவத்தை நாத்தான் கண்டித்ததில் இதைக் காண்பிக்கிறார். மூன்று எபிரெய வாலிபர்கள் நேபுகாத்நேச்சாரின் கட்டளைக்குப் பணிந்து விக்கிரக ஆராதனையாளர்களாவதற்கு மறுத்து, மாறாக, அக்கினிச் சூளையில் துணிச்சலுடன் அதை வெளிப்படுத்தினர். தானியேல், ராஜாவின்கட்டளைக்கு எதிராக இருந்தபோதிலும் தேவனிடத்தில் இடைவிடாமல் ஜெபித்து, தனது மனசாட்சியினிமித்தம் சிங்கத்தின் குகையில் தள்ளப்படுவதற்கு ஒப்புக்கொண்டு, அதை செயலில் வெளிப்படுத்தினார். தேவனுடைய பிரமாணங்களை மீறுவதற்கான அந்தியோக்கஸ் எப்பிஃபேனஸின் (Antiochus Epiphanes's) கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுக்கும்படி எபிரெய தாய்மார்கள் தங்கள் விசுவாச உண்மைத்துவமுள்ள மகன்களை ஊக்குவித்தது அதற்கு அற்புதமான எடுத்துக்காட்டுகளாகும். இரத்த சாட்சிகளின் வரலாறு மத ரீதியான தைரியத்தின் நிகழ்வுகளால் நிரம்பியுள்ளது. நிச்சயமாக, இயேசு, ஸ்தேவான் மற்றும் பவுல் ஆகியோர்கள் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் அவர்களுடைய அர்ப்பணிப்பினிமித்தம் மரணத்தைத் துணிச்சலுடன் எதிர்கொண்டதில் மத ரீதியான தைரியத்தின் மிகச்சிறந்த உதாரணங்களாவர்.

சபை வரலாற்றில் தைரியத்திற்குரிய பல அற்புதமான உதாரணங்கள் நமக்கு உள்ளன. கிறிஸ்தவத்தை அழிக்க முயன்ற ரோமானியப் பேரரசரான மார்க்கஸ் ஆரேலியஸின் (Marcus Aurelius) நாட்களில், ரோமானிய உயர்குடியைச் சேர்ந்த தலைமை செவிலியும் விதவையுமான ஃபெலிசிடாஸ் (Felicitas) என்பவர், தன்னையும் தனது ஏழு மகன்களையும் அவன் கிறிஸ்துவை மறுதலிக்கும்படி செய்ய முயற்சித்த போது, இந்த குணப்பண்பை வெளிப்படுத்தினாள், அவளுடைய மகன்களை அவளுக்கு முன்பாகவும், ஒவ்வொருவரின் கண்களுக்கு முன்பாகவும் ஒருவர் பின் ஒருவராக கொடூரமாகச் சித்திரவதைச் செய்து கொன்றான், அவர்களின் சித்திரவதைகளுக்கு மத்தியிலும், விசுவாசத்தில் உறுதியாக இருக்கும்படி அவர்களை ஊக்குவித்தாள், அவர்களும் அதையே செய்தார்கள், அவர்களுக்குப் பின் அவர்கள் அவளை மரணம் வரை கொடுமைப்படுத்தியபோதும், அவளை தனது கர்த்தரை மறுதலிக்கும்படிச் செய்ய முடியவில்லை.

ஜாண் ஹஸ்ஸின் (John Huss) விசேஷித்த உதவியாளரான பிராகுவைச் சேர்ந்த ஜெரோம் (Jerome of Prague) அவருடைய விசுவாசத்திற்காக, கழுமரத்தில் கட்டி எரிக்கப்பட்டார். மரணதண்டனையை நிறைவேற்றுபவர் அவருடைய பார்வைக்கு மறைவாக பின்புறம் நெருப்பைப் பற்ற வைக்க முயன்றபோது, ஜெரோம் அவர் காணும் வகையில் அவருக்கு முன்புறம் அதைப் பற்ற வைக்கும்படி கூறினார்; நெருப்பு பற்றவைக்கப்பட்டதும், அவர் ஒரு பாடலைப் பாடத் தொடங்கினார், மேலும் பாடலை முடிக்க அவரைத் தடைபண்ணிய தீப்பிழம்புகள் அவரது வாய்ப் பகுதியை அடையும் வரை அதைப் பாடினார்.

கிரான்மரின் (Cranmer) விசேஷித்த உதவியாளரான ஹியுக் லாடிமர் (Hugh Latimer), இந்த வகையான தைரியத்திற்கு மற்றொரு உதாரணம். அவரைக் கைது செய்வதற்கான இயக்கத்தைப் பற்றி அறிந்துக்கொண்ட அவர், கைது செய்யும் அதிகாரியைச் சந்தித்து அவருடன் செல்லத் தயாரானார், தப்பித்துச் செல்ல அவருக்கு நீண்ட கால வாய்ப்பை அவர் வழங்கினார். இந்த வாய்ப்பை ஏற்க மறுத்து, அந்த அதிகாரியுடன் சென்று, ஹென்றி VIII மற்றும் ஜார்ஜ் V ஆகியோருக்கு முன்பாக, முன்பு பிரசங்கித்ததைப் போலவே, "இரத்த வெறிப்பிடித்த" மேரியின் முன் தனது விசுவாசத்தை அறிக்கையிடத் தயாராக இருந்தார். ஒரு மதவிரோதியாக கழுமரத்தில் கட்டி எரிக்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டார். அவருக்கும் ரிட்லிக்கும் (Ridley) கீழே நெருப்பு எரியும்போது, அவர், பிந்தையவரிடம், "டாக்டர் ரிட்லி, திடன்கொள்ளுங்கள், மன உறுதியுடனிருங்கள். தேவனுடைய கிருபையால் இன்று இங்கிலாந்தில் அத்தகைய மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்போம், அது ஒருபோதும் அணைக்கப்படாது என்று நான் நம்புகிறேன்" என்று கூறினார்; பின்னர் அவர் ஜெயங்கொண்டவராக மரித்தார். மத ரீதியான தைரியத்தை விளக்கும் ஆயிரக்கணக்கான நிகழ்வுகளில் இவை சில மட்டுமே.

## தைரியத்தின் களங்கள்

தைரியமானது மதச்சார்பற்ற மற்றும் மத ரீதியிலான களங்களில் செயல்படுகிறது. இது குடும்பத்தில் மதச்சார்பற்ற களத்தில் செயல்படுகிறது. பல சந்தர்ப்பங்களில் மனைவியானவள் நியாயமற்ற மற்றும் கொடுங்கோன்மையுள்ள கணவரின் எதிர்ப்புக்கு எதிராகக் கர்த்தருடைய சித்தத்தைச் செய்வதற்கான தைரியத்தை உபயோகிக்க வேண்டும். சண்டைக்காரி அடங்காப்பிடாரியான மனைவியின் அபகரிப்புகளுக்கு எதிராகத் தனது தலைமைத்துவத்தைக் காத்துக் கொள்ள பல சந்தர்ப்பங்களில் கணவர் தைரியத்தை வெளிப்படுத்த வேண்டும். நிச்சயமாக, சகோ. வெஸ்லியும் சகோ. ரஸலும் சண்டைக்காரியான மனைவியின் எதிர்ப்பைச் சந்திக்க தைரியமாக இருக்க வேண்டியிருந்தது. பல பெற்றோர்கள் எதிர்க்கிற பிள்ளைகளின் அபகரிப்புகள் மற்றும் கீழ்ப்படியாமைகளுக்கு எதிராகத் தைரியத்தை வெளிப்படுத்த வேண்டும். சத்தியத்தை வெறுக்கும் மற்றும் அநீதியான தகப்பன் அல்லது தாயின் அபகரிப்புகள் மற்றும் கொடுங்கோன்மைகளை மேற்கொள்ள பல பிள்ளைகள் துணிவுடன் இருக்க வேண்டும். மேலும் பல சகோதரர்கள் அல்லது சகோதரிகள் மாம்சப் பிரகாரமான சகோதரர்கள் அல்லது சகோதரிகளின் எதிர்ப்பை வெல்ல மிகவும் தைரியமாக இருக்க வேண்டியிருக்கிறது.

குடும்பத்தில், வாழ்க்கைத் துணை, பெற்றோர், பிள்ளைகள், சகோதர சகோதரிகள் ஒன்று சேர்ந்து சத்தியத்திற்கு தங்கள் எதிர்ப்பை மிகவும் அன்பான மனநிலையுடன் வெளிப்படுத்தும்போது தைரியம் முக்கியமாகத் தேவைப்படுகிறது; ஏனெனில் அப்படிப்பட்ட சூழ்நிலைகளில், சத்திய குடும்பத்தின் உறுப்பினர் எதிர்ப்பைக் கைவிடுவது எளிது. மேலே குறிப்பிடப்பட்ட கருத்துக்களில் அடங்கியுள்ள இது போன்ற நிகழ்வுகளை நாங்கள் கவனித்துள்ளோம், மேலும் அவற்றில் தைரியம் தேவை என்பதையும் அறிந்துள்ளோம்.

**பலங்கொண்டு திடமனதாயிரு**

**"திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்"** (N KJ).

**யோசுவா 1:9**

தொழில் உலகில் கழுத்தறுக்கும் கடுமையான போட்டி, தவறான சித்தரிப்பு, நியாயமற்ற நடைமுறைகள் மற்றும் அந்நியப்படுத்தப்படுதல்கள் ஆகியவை தொழில் பாதைகளில் தேவனுடைய பிள்ளைக்கும், ஊழியக்காரனுக்கும் அடிக்கடி ஏற்படுத்தும் எதிர்ப்பை எதிர்கொள்கையில், சரியானதைச் செய்வதற்கும், அதற்காக நிலை நிற்பதற்கும் மிகுந்த தைரியம் தேவைப்படுகிறது.

தேசத்தில், கர்த்தருடைய வார்த்தைக்கு முரணான சில அரசாங்க நடவடிக்கைகளுக்கு எதிராக, சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றுக்காக நிற்பதற்கு அடிக்கடி அதிக தைரியம் தேவைப்படுகிறது; உதாரணமாக, தெய்வீகமாக தடைசெய்யப்பட்ட வழிகளில் செயல்படும் அரசாங்கம் மற்றும் சபையின் கூட்டுறவிற்கு எதிராகப் போராடுவது, போரில் யுத்தம் செய்வதற்கு மனசாட்சியினிமித்தம் ஆட்சேபனை தெரிவிப்பது மற்றும் அரசாங்க தரப்பிலான ஒடுக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது போன்றவைகளுக்கு அதிக தைரியம் தேவைப்படுகிறது.

உலகப் போரின் இரு கட்டங்களிலும், அதைத் தொடர்ந்து வந்த யுத்தங்களிலும், கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் தங்கள் கொள்கைகளுக்காக தாங்கள் உட்படுத்தப்பட்ட கட்டாயப்படுத்துதல், ஏளனம் மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றை எதிர்த்து, கர்த்தருடைய வார்த்தைக்கு விசுவாசப் பற்றுறுதியுடன் இருப்பதற்காக, யுத்தத்தின் வேதனையுடன் போராட வேண்டியிருந்தது. உண்மையாகவே, இயேசுவின் இரத்தசாட்சிகள் மற்றும் அவரை அறிக்கையிட்டவர்களின் வரலாறு முழுவதும், யூத மதம், புறஜாதி மதம், ரோமின் போப்புமார்க்கம் மற்றும் புராட்டஸ்டண்ட் அமைப்பின் பிரிவினைவாதம் போன்றவற்றினுடைய செல்வாக்கின் கீழிருந்த தேசங்கள் துன்புறுத்தியதன் மூலம் அவர்கள் மீது கொண்டுவரப்பட்ட பாடுகளால் நிறைந்துள்ளது; மேலும் எதிர்ப்பில் முதல் தரமான தைரியம் பயன்படுத்த வேண்டியிருந்தது.

மத ரீதியான களத்தில், எதிர்ப்பை முறியடிக்க உயர் தரமான தைரியம் வெளிக்காட்டப்பட வேண்டும். கிறிஸ்தவ பாதையின் துவக்கத்திலிருப்பவர்கள் பாவத்திலிருந்து நீதிக்கும், இரட்சகராக கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கும் திரும்பும்போது பெரும்பாலும் எப்போதும் நிந்தனை, கேலி மற்றும் புறக்கணிப்புக்கு ஆளாகிறார்கள். ஒருவர் பிரதிஷ்டை செய்து விசுவாச உண்மைத்துவத்துடன், அந்த பிரதிஷ்டையை நிறைவேற்ற முற்படும்போது இவைகளுடன் பிற துன்புறுத்தல்களும் அதிகரிக்கின்றன. அந்த பிரதிஷ்டையை நிறைவேற்ற முற்படும் ஒருவருக்கு, குறிப்பாக சத்தியத்தை ஆராய்ந்து, தப்பறைக்கு எதிராக சத்தியத்திற்காக சாட்சி

கொடுப்பதின் வழியில் உபத்திரவங்கள் வருகின்றன. இதனை சரியான முறையில் எதிர்கொள்ளவும் ஜெயம் கொள்ளவும் சிறந்த தைரியம் தேவைப்படுகிறது.

பெயரளவிலான சபையிலிருந்து ஒருவர் தனது அங்கத்தினர் பதவியை முறித்து வெளியேறுவது, குறிப்பாக, அங்குள்ள அன்பான ஐக்கியத்தை முறிப்பதற்கும், குடும்பம், வணிகம் மற்றும் சமூக பிரச்சனைகளுக்கும், உபத்திரவங்களுக்கும், சமுதாயப் புறக்கணிப்பிற்கும் வழிவகுக்கும் போது, கர்த்தருடைய ஆவியில், ஒரு அரிய வகை தைரியத்தைப் பெற்றுக்கொள்கிறான்.

சத்தியத்திற்குள் வந்த பிறகு, சத்திய வட்டாரங்களில், சகோதரர்களிடையே ஒருவர், ஏற்றுக்கொள்ளவோ, அங்கீகரிக்கவோ முடியாத, ஆனால் கட்டாயம் எதிர்க்க வேண்டிய சூழ்நிலைகளை அடிக்கடி எதிர்கொள்கிறார்; இந்த நிலைமைகள் கர்த்தருடைய சத்தியத்திற்கும் ஏற்பாடுகளுக்கும் எதிரான புரட்சிகரவாதத்தை உள்ளடக்கியதாக விடாப்பிடியாகத் தொடரப்படும் போதும், நாம் மிகவும் நேசிக்கும் சிலரிடமிருந்து பிரிந்து செல்ல கட்டாயப்படுத்தப்படும் போதும், அவர்களின் மாம்ச சிந்தைகள் அழிக்கப்படும் வரை, அத்தகைய சகோதரர்களிடமிருந்து ஐக்கியத்தை பகுதியளவு அல்லது முழுமையாக விலக்கிக் கொள்ளத் தைரியம் தேவைப்படுகிறது. (1 கொரி. 5:5). அத்தகைய புரட்சிகரவாதம் தடையின்றி தொடர அனுமதிப்பது மாம்சத்திற்கு மிகவும் எளிதானது; ஏனென்றால் அது ஒருவரை பல மன வேதனைகளிலிருந்து காப்பாற்றும்; ஆனால் அத்தகைய சூழ்நிலைகளின் கீழ் சரியாக செயல்படுவதற்கு நாம் தைரியமாக நம்முடைய மாம்சத்தின் உணர்வுகளை அடக்கி, இவ்வாறான நிகழ்வுகளில் கர்த்தருடைய பொருத்தமான சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, தைரியத்துடன் புதிய இருதயம், மனம் மற்றும் சித்தம் முழுமையாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும். நிச்சயமாகவே, பிசாசு, உலகம் மற்றும் மாம்சத்தால் சூழப்பட்ட நமது நெருக்கப் பாதையின் சோதனைகள், சிட்சைகள் மற்றும் பரீட்சைகள், உயர்தர தைரியத்தை விசுவாச உண்மைத்துவமுடன் வெளிப்படுத்த அழைக்கின்றன.

## தைரியத்தின் மாபெரும் தேவை

கிறிஸ்தவ வாழ்க்கையில் தைரியத்தின் மாபெரும் தேவை உள்ளது. உலகில் தேவனுடைய நோக்கத்தை நிலைநிறுத்தும் விதத்தில், அதை முன்னெடுத்து செல்வதற்கு நாம் தைரியமாக இருக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதனால் தான், தேவனுடைய நோக்கத்தை முன்னெடுத்துச் செல்ல நம்முடைய தைரியம் தேவைப்படுகிறது என்று நாங்கள் கூறுகிறோம். தம்மில்தானே போதுமானவராயிருக்கிற தேவன், தம்முடைய நோக்கத்திற்கான நம்முடைய ஊழியத்தை உடனடியாக நிறுத்தவும் முடியும் என்பது உண்மைதான். தம்முடைய வல்லமையைப் பயன்படுத்துவதன் மூலம், அவர் சித்தங்கொண்டால், அனைத்து எதிர்ப்புகளையும், அனைத்து விரோதிகளையும் ஒதுக்கி வைக்க முடியும். அவர் விரும்பினால், தம்முடைய சித்தத்தை மனிதனுக்குத் தெரியும்படி வானத்தில் வெளிப்படையாக எழுதவும், நாம் உலகிற்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதை நிறுத்தவும் முடியும்.




தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் நிகழ்கால மற்றும் எதிர்கால நன்மைக்காகவும், தேர்ந்தெடுக்கப்படாத உலகத்தாரின் எதிர்கால நன்மைக்காகவும், அவர் தனது நோக்கத்தை உலகில் விட்டுவைத்திருக்கிறார், எனவே, அதை முன்னெடுத்துச் செல்வதற்கு நமக்கு தைரியத்தின் பயிற்சி தேவைப்படுகிறது. நாம் சத்தியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அவர் அதைத் தவறாக அறிவிக்கப்பட அனுமதிக்கிறார்; நாம் அவருடைய ஜனங்களை மீட்கும்படிக்கு அவர்களைப் பாடுபட அவர் அனுமதிக்கிறார்; நாம் நீதியை உயர்த்துவதற்காக அது தாழ்த்தப்பட அவர் அனுமதிக்கிறார்; மேலும் நாம் பரிசுத்தத்தின் சார்பாக போராட வேண்டும் என்பதற்காக அவர் அதனை எதிர்க்கப்பட அனுமதிக்கிறார். மேலும், தேவன் இப்பொழுது நம்மைச் சூழ்ந்திருக்க விரும்புகிற இந்த நிலைமைகளின் கீழ் நாம் தைரியமாக இந்தப் போராட்டத்தில் ஈடுபடாவிட்டால், மனுஷீக ரீதியாகச் சொல்வதென்றால், தேவனுடைய நோக்கம் தடைசெய்யப்படாவிட்டாலும், பயனற்ற நிலைக்குத் தள்ளப்படும். தேவன், தம்முடைய காரியத்தை முன்னெடுத்துச் செல்ல விசுவாச உண்மைத்துவமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பார்களைச் சார்ந்து இருக்க முடியும் என்பதை முன்னரே அறிந்திருந்ததால், அதைத் தொடர அவர்களுக்குத் தைரியம் தேவைப்படும் நிலையில் அதை விட்டுவைப்பதில் மகிழ்ச்சியடைந்தார்.

தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் நிகழ்கால மற்றும் எதிர்கால நன்மைக்காகவும், தேர்ந்தெடுக்கப்படாத உலகத்தாரின் எதிர்கால நன்மைக்காகவும், அவர் தனது நோக்கத்தை உலகில் விட்டுவைத்திருக்கிறார், எனவே, அதை முன்னெடுத்துச் செல்வதற்கு நமக்கு தைரியத்தின் பயிற்சி தேவைப்படுகிறது. நாம் சத்தியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அவர் அதைத் தவறாக அறிவிக்கப்பட அனுமதிக்கிறார்; நாம் அவருடைய ஜனங்களை மீட்கும்படிக்கு அவர்களைப் பாடுபட அவர் அனுமதிக்கிறார்; நாம் நீதியை உயர்த்துவதற்காக அது தாழ்த்தப்பட அவர் அனுமதிக்கிறார்; மேலும் நாம் பரிசுத்தத்தின் சார்பாக போராட வேண்டும் என்பதற்காக அவர் அதனை எதிர்க்கப்பட அனுமதிக்கிறார். மேலும், தேவன் இப்பொழுது நம்மைச் சூழ்ந்திருக்க விரும்புகிற இந்த நிலைமைகளின் கீழ் நாம் தைரியமாக இந்தப் போராட்டத்தில்

ஈடுபடாவிட்டால், மனுஷீக ரீதியாகச் சொல்வதென்றால், தேவனுடைய நோக்கம் தடைசெய்யப்படாவிட்டாலும், பயனற்ற நிலைக்குத் தள்ளப்படும். தேவன், தம்முடைய காரியத்தை முன்னெடுத்துச் செல்ல விசுவாச உண்மைத் துவமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பார்களைச் சார்ந்து இருக்க முடியும் என்பதை முன்னரே அறிந்திருந்ததால், அதைத் தொடர அவர்களுக்குத் தைரியம் தேவைப்படும் நிலையில் அதை விட்டுவைப்பதில் மகிழ்ச்சியடைந்தார்.

மேலும், இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பார்களுக்கு தைரியம் தேவைப்படுகிறது. தேவனுடைய நோக்கத்திற்கு எதிரான நிலைமைகளுக்கு மத்தியில் அதைக் காணும் போது அவர்களின் விசுவாசப் பற்றுறுதியையும் சுய-தியாகப் பலியையும் நிரூபிக்க அவர்களுக்கு இது தேவைப்படுகிறது. இந்த நிலைமைகளைச் சரியாக எதிர்கொள்ள அவர்களுக்கு இது தேவைப்படுகிறது. இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பார்களின் குணாதிசயப் பண்புகளைத் தற்போதைய மற்றும் எதிர்கால ஊழியங்களுக்கு ஏற்றவாறு தகுதிப்படுத்துவதின் ஒரு பகுதியாக இது தேவைப்படுகிறது; மேலும் ஜெயங் கொள்பவர்களாக நிரூபிக்க அவர்களுக்கு இது தேவைப் படுகிறது. அவர்களின் சகோதரர்களை சத்தியத்திற்குக் கொண்டுவருவதற்கும், கிறிஸ்தவ யுத்தத்தில் அவர்களை ஊக்குவிப்பதற்கும், அவர்களின் சத்துருக்களை ஜெயம் கொள்வதற்கு அவர்களுக்கு உதவும்படி அவர்கள் தைரியத் தைப் பயிற்சி செய்வது அவசியமாகிறது. அவர்கள் இந்த குணாதிசயத்தை பயிற்சி செய்வது உலகிற்கும் தேவைப் படுகிறது; ஏனெனில், அது இப்போது அவர்களுக்குத் தேவையான சில உதவிகளையும் ஆசீர்வாதங்களையும் கொண்டு வருகிறது, மேலும் அவர்கள் ஆயிரம் வருட யுக மத்தியஸ்தர் ஆட்சியில் ஜீவனுக்கான பரீட்சைக்கு வரும்போது நிச்சயமாக அவர்களுக்கு அது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட முன்மாதிரியாக இருப்பதை நிரூபிக்கும்.

## தைரியத்தின் அனுகூலங்கள்/நன்மைகள்

தைரியத்தின் நன்மைகள் மகத்தானவைகள். மற்ற எல்லா கிருபைகளையும் போலவே, இது தேவனுக்குப் பிரியமாயிருக்கிறது, நிச்சயமாகவே, அவருடைய மகிமையான ஆள்தத்துவம், பரிசுத்தமான குணப்பண்புகள், அற்புதமான திட்டம் மற்றும் மகத்தான செயல்களுக்காக, மனமகிழ்ச்சியைப் பெற உரிமையுடையவர்; மேலும் நாம் அவருக்குக் கொடுக்கக்கூடிய நமது பலவீனமான வீழ்ச்சியடைந்த ஆற்றல்களை விட மிகவும் அதிகமானதிற்கு உரிமையுடையவர். ஒரு தைரியமான இயல்பும், அதன் பண்புகள், செயல்கள் மற்றும் விளைவுகளும், அதை உருவாக்குபவர், பலப்படுத்துபவர், சமநிலைப்படுத்துபவர் மற்றும் படிகமாக்குபவர் என தேவன் மீது புகழைப் பிரதிபலிக்கிறது. நிச்சயமாகவே, அதன் நோக்கங்களும் முடிவுகளும் அவருடைய திட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றன; மேலும் இந்த செயல்பாடுகள் மற்றும் பலன்களினால், நம்மிடமிருந்து மிகுந்த மகிமையைப் பெற பாத்திரரான தேவனை அது மகிமைப்படுத்துகிறது.

தைரியம் அதை உடையவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அது அவர்களை யுத்தத்தில் தோல்வியை வெற்றியாகவும், அடுத்தடுத்த வெற்றிகளை முழுமையான வெற்றியாகவும் மாற்றும் ஆற்றலுள்ளவர்களாக்குகிறது. அது தன் பகைவர்களை விரட்டியடிக்கிறது. நம்மை அடிமைப் படுத்த முற்படும் நம்முடைய தவறுகள், குறைபாடுகள் மற்றும் பலவீனங்களின் முயற்சிகளை இது தடுத்து நிறுத்துகிறது. இது கடினமான விஷயங்களை எளிதாக்குகிறது அல்லது ஒப்பீட்டளவில் எளிதாக மேற்கொள்ள உதவுகிறது. இது தோல்விக்காக துக்கப்படுவதன் அவசியத்திலிருந்து காப் பாற்றுகிறது. கடுமையான போராட்டத்தினுடைய அழுத்தத் தின் கீழ் ஒவ்வொரு கிருபையும் வளர்ச்சியடையவும், அதன் வெற்றிகளைத் தக்கவைக்கவும் இது உதவுகிறது. அது இழந்த தளத்தை/நிலத்தை மீட்டெடுத்து, எதிராளியை அதன் முன் தோற்கடித்து, அவன் நீண்ட காலமாக அபகரித்து வைத்திருந்த பிரதேசத்திலிருந்து அவனை அப்புறப்படுத்து கிறது. அதைப் பயிற்சி செய்வது அதை வளர்த்து, பலப்படுத்தி, சமநிலைப்படுத்தி, படிகமாக்குகிறது. மேலும் அதற்கு அடுத்திருக்கும் கிருபைகளுக்கு அதே வழியில் உதவுகிறது. கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் போர்க்களச் சூழலில் நமது ஆவிக்குரிய எதிராளிகளுக்கு எதிரான தற்காப்பு மற்றும் எதிர்த்தாக்குதலுக்கு இது இன்றியமையாதது.

இது நம்முடைய சகோதரர்களுக்கும் யுத்தத்தில் அவர்களுக்கு உதவுகிறது. இது பலவீனமானவர்களை உற்சாகப் படுத்துகிறது, பலவான்களை இன்னும் பலப்படுத்துகிறது, மற்றும் சக யுத்த வீரர்கள் அனைவரையும் அவர்களுடைய யுத்தத்தின் அனைத்து அம்சங்களிலும் வலுப்படுத்துகிறது. இது அவர்களுக்கு காவலைக் காக்கிறவர்களாக உதவுகிறது, போரிடுகிறவர்களாக அவர்களை ஆதரிக்கிறது; இது பாதுகாவலர்களாக அவர்களைப் பலப்படுத்துகிறது மற்றும் இது சகித்துக்கொள்ளும்போது அவர்களை உற்சாகப் படுத்துகிறது. இது தளர்ந்துபோன படைவரிசைக்கு மீண்டும் வலுவூட்டுகிறது; இது முன்னேறும் படை வரிசையை ஊக்குவிக்கிறது; மேலும் இது, எதிர்க்கும் படை வரிசையை ஒரு கற்சுவர் போல உறுதியாக நிற்க வைக்கிறது. இது செயல்பாட்டில் காட்டப்படாவிட்டால், பல சக வீரர்கள் விரைவாகப் பின்வாங்கி ஓடிவிடுவார்கள். பல தாக்குதல்கள் வலுவிழந்து முடங்கி விடும்; பல பாதுகாப்பு அரண்கள் தகர்ந்து விடும். பலதரப்பட்ட இன்னல்கள் மனச்சோர்வை ஏற்படுத்தும்; மேலும் பல காவல் வீரர்களும், ஒற்றர்களும் சத்துருவின் முன்னிலையில் சரணடைந்து விடுவார்கள். ஆகையால் தைரியம், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மிகவும் நன்மை பயக்கக் கூடியதாகும்.

## தைரியத்தின் எதிரிகள்

சாத்தான் நம்முடைய பலவீனம் மற்றும் பெலத்தின் நிலைகளை அறிந்திருப்பதால், நமக்கு எதிராக மிகவும் தந்திரமான மற்றும் சக்திவாய்ந்த தாக்குதல்களை எவ்வாறு தொடுக்க வேண்டும் என்பதை நன்கு அறிந்திருக்கிறான். நாம் எந்தெந்த வழிகளில் தோற்கடிக்கப்பட அதிக வாய்ப் புள்ளது என்பதை அவன் அறிந்துள்ளான், முடிந்தவரை நமக்குத் தீங்கு விளைவிக்கவும் அவனுக்கு சாதகமாகவும்

தனது தாக்குதல்களையும் தற்காப்பு களையும் திட்டமிட்டுச் செயல்படுத்து கிறான். ஆனால் தெய்வாதீனமாக, நாம் அவனைத் தனியாகச் சமாளிக்கவில்லை; ஏனென்றால், நம் இரட்சிப்பின் அதிபதி யான நம்முடைய ஆண்டவராகிய இயேசு, "தேவன் தாமே தேர்ந்தெடுத்த பராக்கிரம சாலியாக, நம்சார்பில் யுத்தம் பண்ணு கிறார்." இந்த உண்மை நம்மிடமுள்ள எல்லா தைரியத்தையும் மற்ற கிருபை களையும் ஒன்றிணைத்து உபயோகிப்ப துடன், நாம் விசுவாச உண்மைத்து வத்துடன் போராடினால் வெற்றியை உறுதி செய்யும். நாம் சாத்தானுக்கு முன்பாகவோ அல்லது அவனைப் பார்த்தோ நடுங்கக்கூடாது, மாறாக நம்முடைய சேனைத் தலைவரின் கட்டளையின்படி பயமின்றி அவனை எதிர்த்துப் போரிட வேண்டும்; நமது பாட வசனம் "**நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள், உத்தமனுக்குக் கர்த்தர் துணை**" (2 நாளா. 19:11) என்று குறிப்பிடுவதைப் போல, நாம் ஈடுபட்டுள்ள ராஜரீக யுத்தத்தில் தைரியமானவர்களுக்கும் உத்தமர்களுக்கும் அவர் ஜெயம் கொடுப்பார்.



என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு.
பிலிப்பியர். 4:13

ஆகையால், உலகின் அறியாமை மற்றும் மூட நம்பிக்கை மூலம் அதைத் தூண்டிவிட்டு, அதன் பாவத் தன்மை, சுயநலம், தப்பறை மற்றும் உலகத்தனத்தை நமக்கு எதிராக அவன் பயன்படுத்துகிறான். இது சில சமயங்களில் நம்முடைய குடும்பங்களிலும், நம்முடைய தொழிலிலும், பணிபுரியும் சக ஊழியர்களிலும், நம்முடைய நண்பர்களிலும், நம்முடைய சத்துருக்களிலும், குடிமக்கள், அரசு மற்றும் தேசிய அதிகாரங்களிலும், பெயரளவிலான சபையிலும் செயல்படுத்தப்படுகிறது. ஏதாவது ஒரு வழியில் அல்லது வேறுவழியில், அவன் இவற்றை நமக்கு எதிராகத் தனியாகவோ அல்லது ஒன்று சேர்த்தோ கையாளுகிறான்; போராடுவதில் நாம் தைரியமாக இருக்க வேண்டும், இல்லையெனில் நாம் தோல்வியடைந்து வீழ்வோம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு நமது புது சித்தத்தை நமது மாம்சத்தை விட வலிமையானதாக மாற்றும் அளவுக்கு பலப்படுத்தாவிட்டால், நாம் எவ்வளவு தைரியத்தைக் கொண்டிருந்தாலும் இதை மேற்கொள்வது சாத்தியமற்றதாகிவிடும். மேலும் நிச்சயமாக, நமது யுத்தத்தில் மற்ற கிருபைகளுடன், நாம் தைரியத்தையும் உபயோகிக்க வேண்டும் என்று அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார், அதன் மூலம் நாம் ஒரு வெற்றிகரமான யுத்தத்தை நடத்த முடியும். நமது மாம்சத்தை ஒரு புறக்கணிக்கத்தக்க எதிரியாக நாம் இகழ்வாகக் கருதக் கூடாது. உலகத்தில், மாம்சம் மற்றும் பிசாசு ஆகியவற்றில், மாம்சம் மிகவும் விடாப்பிடியானது மற்றும் பிடிவாதமானது; ஏனென்றால், சாத்தான் நமது வெற்றிகரமான யுத்தத்தால் முற்றிலும் குழப்பமடையும்போது, அவன் நம்மை சிறிது காலத்திற்குத் தனியாக விட்டுவிடுகிறான்; உலகம் நம்மைத் தோற்கடிக்க முயற்சிக்கும் அதன் செயல்களின் ஒவ்வொரு கட்டத்திலும் அது முறியடிக்கப்படும்போது, குறைந்தபட்சம் சிறிது காலத்திற்காவது அது யுத்தத்தைக் கைவிடுகிறது; ஆனால் மாம்சம் ஒருபோதும் கைவிடாது. ஒரு இடத்தில் தாக்குதலை தடுத்து நிறுத்தினால், அது இன்னொரு இடத்தில் தாக்குகிறது, மேலும் அது உண்மையில் கொல்லப்படும் வரை இடைவிடாத யுத்தத்தைத் தொடர்கிறது; இது நிறைவேற்றப்படுவதற்கு, முழு ஜீவிய காலமும் தேவைப்படுகிறது. வலிமைமிக்க சத்துருக்கள் நிறைந்த உலகத்தால் சூழப்பட்டிருந்தாலும், நம்முடைய தேவனும் நம்முடைய அதிபதியும் அவர்களை விட மிகவும் வல்லமையானவர்கள் என்பதையும், அவர்கள் நம் பக்கத்தில் இருக்கிறார்கள் என்பதையும் அறிந்து, தொடந்து நமது தைரியத்தைக் காத்துக் கொள்வோமாக.

## தைரியத்தின் பயன்பாடுகளும் அதன் தவறான பயன்பாடுகளும்

தைரியத்தின் பயன்பாடுகள் குறித்து சில கருத்துக்களை நாங்கள் தருகிறோம். மற்ற எல்லா கிருபைகளையும் போலவே, இந்த ஒன்றும் குணநலப் பண்புகளின் கட்டமைப்பில் அதன் செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. மேலும் இவற்றைப் பற்றிய ஒரு சுருக்கமான பார்வை தைரியத்தை நடைமுறைக்கு ஏற்றவாறு பயன்படுத்துதவற்கு உதவியாக இருக்கும்.

அதன் முதல் பயன்பாடு அல்லது செயல்பாடு ஆபத்தை முறையாகவும் வெற்றிகரமாகவும் எதிர்கொள்ள நமக்கு உதவுவதாகும்; ஏனெனில் ஒருவரின் வாழ்க்கைப் போக்கில் ஏற்படும் ஆபத்தான சூழ்நிலைகளே இதன் விசேஷித்த செயல்பாட்டுக் களமாகும். ஆபத்தில் அச்சத்துடன் அல்லது கோழைத்தனமாக இருப்பது தோல்விக்கான முன்காரணியாகும், அதே நேரத்தில் மற்றவை அனைத்தும் சமநிலையில் இருக்கும் போது, அத்தகைய ஆபத்தில் தைரியமாக இருப்பது, வெற்றிக்கான முன்காரணியாகும். கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆபத்துகளை முறையாகவும் வெற்றிகர மாகவும் சந்திக்க நாம் தைரியத்தை நன்கு பயன்படுத்த வேண்டும்.

அதன் இரண்டாவது பயன்பாடு வெற்றியைப் பெறுவதாகும். எல்லா யுத்தங்களிலும் மிகவும் தீவிரமான ஒன்றில் நாம் போரிடுகிறோம்; ஏனென்றால் இந்த ஒன்றிலிருந்துதான் ஜீவனுக்கான விளைவுகள் – வெற்றி அல்லது தோல்வி உருவாகிறது. அது அதன் விளைபலனில் எந்த சமரசமும் அறியாத ஒன்றாகும். ஏனெனில் அதன் இறுதியான விளைபலன் புதிய சித்தத்திற்கான ஜெயம் அல்லது தோற்றுப் போதல், வெற்றி அல்லது தோல்வி, ஜீவன் அல்லது மரணம்

என்பதாக இருக்க வேண்டும். தோல்வியைத் தவிர்ப்பதற்கும், வெற்றியைப் பெறுவதற்கும் நமக்கு உதவுவது தைரியத்தின் பணியாகும்; நாம் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாகவும், தைரியமுள்ளவர்களாகவும் இருந்தால், நாம் நிச்சயமாக ஜெயம் பெறுவோம்; ஆனால் விசுவாசமற்றவர்களாகவும், கோழைகளாகவும் இருந்தால், நாம் தோல்வி அடைவோம்.

தைரியத்தின் மூன்றாவது பயன்பாடு பலவீனமானவர்களைப் பாதுகாப்பதாகும். சரீர ரீதியான யுத்தத்தில், வலிமையானவர்கள் மற்றும் தைரியமானவர்கள், பலவீனமான தங்கள் சக வீரர்களைப் பாதுகாக்கிறார்கள்; எனவே, புதிய சித்தத்திற்கான யுத்தமாகிய நமது யுத்தத்தில், அதாவது நம்முடைய மனநிலையின் களத்தில் நடத்தப்படும் புதிய சித்தத்தின் யுத்தத்தில், வலிமையானவர்களும், தைரியமானவர்களும், பலவீனமான தங்கள் சகோதரர்களைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் வேண்டும். அவர்களுக்கு தைரியத்தின் ஒரு முன்மாதிரியாக இருப்பதன் மூலமாகவும், பின்னர் ஊக்கமளிக்கும் வார்த்தைகளினாலும், அவர்களின் அச்சங்களைப் போக்கி, தைரியத்தைத் தூண்டுவதன் மூலமாகவும், இறுதியாக அவர்களின் காவற்பணி, வலியதாக்கும்தன்மை, தற்காப்புத்தன்மை மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றில் அவர்களைப் பாதுகாப்பதன் மூலமாகவும் இதைச் செய்ய அவர்கள் பாக்கியம் பெற்றுள்ளனர்.

தைரியத்தின் நான்காவது பயன்பாடு, கடும் நெருக்கடிக்குள்ளான அல்லது தோற்கடிக்கப்பட்ட சக வீரர்களை மீட்பதாகும். பல உதாரணங்கள் நிரூபிக்கிறது போல, இராணுவ யுத்தத்தில் இது பெரும்பாலும் தைரியத்தின் பயன்பாடாகும், உதாரணமாக, உலகப் போர் இரண்டாம் கட்டத்தில், பலமுறை கடுமையான நெருக்கடியில் சிக்கி தற்காலிகமாகத் தோற்கடிக்கப்பட்ட வீரர்களை, அவர்களின் வீரமிக்க சக வீரர்கள் சரியான நேரத்தில் உதவிக்கு வந்து அந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து அவர்களை மீட்டு தோல்வியை வெற்றியாக அல்லது மீட்பாக மாற்றினார்கள். தைரியத்தின் மேற்கூறிய நான்கு பயன்பாடுகள், குணநலப் பண்புகளில் மிகவும் பயனுள்ள செயல்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை நிரூபிக்கின்றன.

தைரியத்தின் கோட்பாடு மற்றும் நடைமுறையை ஆராயும்போது, அது அடிக்கடி தவறாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு குணமாக உள்ளது என்பதையும் நாம் நிச்சயமாகக் காண்கிறோம்; ஏனெனில் அது மிகையாகக் காட்டப்படுகிறது, மற்றும் குறைவாகக் காட்டப்படுகிறது. அதில் தான் அதன் தவறான பயன்பாடுகளையும் நாம் காண்கிறோம்.

துணிகரம் என்பது இதன் மிகைப்படுத்தலினால் வந்த பயன்பாடுகளில் ஒன்றாகும், ஏனெனில் அதீதத் துணிச்சல் நிச்சயமாக தைரியத்தின் மிகைப்படுத்தலாகும். பொறுப்பற்ற முறையிலும் பயனற்ற விதத்திலும் தன்னை ஆபத்திற்கு ஆளாக்குகிறவன் மடத்துணிச்சலுள்ளவனாவான். தேவதூதர்களும் காலடிவைக்க அஞ்சும் இடத்தில் விரைந்து செல்பவரும் அதே குற்றமுள்ளவராவார்; பொதுவாகவே, அதீதத்துணிச்சல் அதன் குணப்படுத்தலைத் விளைவிக்கக் கூடிய தண்டனைகளைக் கொண்டுவருகிறது. ஆபத்தின் முன்னிலையில் சிக்கல்களை ஏற்படுத்தும் பொறுப்பற்ற தன்மையைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஆபத்து இருக்கும் போது அளவுக்கு மீறி தன்னம்பிக்கை கொள்வதும் மிகையாகக் காட்டப்படும் தைரியத்தின் மற்றொரு வெளிப்பாடாகும். தோட்டத்தில் தனது எஜமானரைப் பாதுகாக்க தனியாக முயன்றபோதும், குறிப்பாக பிரதான ஆசாரியனுடைய வீட்டின் முற்றத்திற்குள் நுழைந்து, மேலும் பிரதான ஆசாரியனின் வேலைக்காரர்கள் மற்றும் வீரர்களிடையே தனக்கு ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டபோதும், தைரியத்தை தவறாகப் பயன்படுத்தியதற்கு அப்போஸ்தலர் பேதுரு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறார்.

பெனாதாத் (1 இராஜாக்கள் அதிகாரம் 20), கோலியாத் (1 சாமுவேல் 17:4-10) போல ஒருவரின் சோதிக்கப்படாத வலிமையைப் பற்றி பேசுவது மற்றும் யோனத்தான் செய்ததை எதிர்த்த பெலிஸ்திய படையினர் (1 சாமுவேல் 14:6), மிகையாகக் காட்டப்பட்ட தைரியத்தின் மற்றொரு வெளிப்பாடாகும். இத்தகைய பெருமைபாராட்டுதல் மேலே கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளில் நிகழ்ந்துள்ளபடி, தோல்விக்கு முன்னான அறிகுறியாக இருக்கிறது.

அனுமானம், தைரியத்தின் மற்றொரு தவறான பயன்பாடாகும். ஏனெனில் அது அதனை மிகையாகக் காட்டுவதாகும். இது முகமதுவின் ஆரம்பகால ஆதரவாளர்களுடன் போரிட்ட நம்பிக்கையற்ற அரபு பழங்குடியினரால் சாட்சியமளிக்கப்படுகிறது. அவர்களின் அதிகப்படியான தன்னம்பிக்கை, அனுமானம் மற்றும் தற்பெருமையினால், எதிரிகளை இழிவாகக் கருதி போரில் பிரவேசித்தனர்; அவர்களுக்கு எதிராக எதிரிகள் ஒரு பங்குதான் என்று எண்ணினார்கள். ஆனால் வெகுவிரைவில், முஸ்லிம்களின் மூர்க்கமான தாக்குதல்களின் கீழ், அவர்களுக்கு எதிராக தாங்களே பத்தில் ஒரு பங்கு என்று உணர்ந்து, தோல்வியடைந்தனர்.

## தைரியத்தைக் குறைவாக காட்டுவதில் ஏற்படும் தவறான பயன்பாடுகள்

அதன் தவறான பயன்பாட்டு வடிவங்களில் முதலாவதானது நிதானமின்மையாகும், இது யுத்தத்தில் உள்ள காரணிகளை சரியாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், அந்தச்சூழலுடன் சம்பந்தப்பட்ட நபர்கள், வல்லமைகள், ஆபத்துகள், எண்ணிக்கைகள் போன்றவற்றுக்கு இடையே உள்ள அவநம்பிக்கையான ஒப்பீடு மற்றும் முரண்பாடு ஆகியவற்றின் மூலம் தன்னைப் பெரிதும் குறைத்து மதிப்பிடுவதோடு, எதிரான காரணிகளை மிகைப்படுத்தி மதிப்பிடுகிறது. இதனுடைய விளைபயன், போரிடுதல் தொடங்குவதற்கு முன்பே தோல்வியில் முடிகிறது.

ஆபத்துகளை மிகைப்படுத்தி, அவற்றைச் சந்திக்கும் ஒருவரின் சொந்தத் தகுதியைக் குறைத்து மதிப்பிடுவது தைரியத்தின் முதல் அம்சத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகும்.

இந்த வடிவங்களில் இரண்டாவது, தைரியத்தின் மற்றொரு தவறான பயன்பாடாகிய பயந்த சுபாவம் ஆகும்; இது தைரியத்தைக் குறைத்துக் காட்டுவதுடன் நிச்சயமாக, அதன் பயன்பாட்டில் தலையிட்டு அதன் நோக்கங்களைத் தோற்கடிக்கிறது.

தைரியத்தைக் குறைத்து மதிப்பிடுவதில் மூன்றாவதும் மிக மோசமானதுமான துஷ்பிரயோகம் கோழைத்தனம் ஆகும்; இது தைரியத்தை இல்லாததாக்குகிறது. நிதானமின்மையானது ஆபத்துகளை மிகையான மதிப்புபடுத்தி, அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் ஒருவனின் திறனைக் குறைத்து மதிப்பிடும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

ஆனால் – நமது முழு தைரியத்துடன் யுத்தத்தில் தேவனுடைய சர்வாயுதவர்க்கம் முழுவதையும் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சைகள், ஊழியம் என்னும் இடைக்கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், நம்பிக்கையென்னும் தலைச்சீரா, விசுவாசமென்னும் கேடயம், ஆவியின் பட்டயம் மற்றும் நம்முடைய அடையாளமான கால்களைப் பாதுகாப்பதற்காக அன்பு என்னும் கால்கவசம் ஆகியவற்றை அணிந்துகொண்டு, நமது முழு தைரியத்துடனும் அவைகளைத் திறம்பட பயன்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்வோமாக. அதை முழுவதுமாக அணிந்து கொள்வதில் அலட்சியம் காட்டாமல் இருப்போமாக, இல்லையெனில் நம்முடைய யுத்தத்தில் குறைந்தபட்சம் பகுதியளவு தோல்வியடைவோம்; ஏனெனில் இது, சட்டப்படி போரிட வேண்டிய ஒரு யுத்தமாகும். ஒருவர் ஜெயங் கொள்பவராக முடிசூட்டப்பட வேண்டுமானால்,இந்த யுத்தத்தின் விதிகளுக்கு இசைவிணக்கமாக போரிட வேண்டும்.

## தைரியத்தை வளர்த்தல்




தைரியத்தை விருத்தியடையச் செய்வது பற்றிய சில வார்த்தைகள்: அது (1) வளர்ச்சி, (2) பலப்படுத்துதல், (3) சமநிலைப்படுத்துதல் மற்றும் (4) படிகமாக்குதல் ஆகிய அனைத்து நிலைகளிலும் வளர்க்கப்பட வேண்டும். இவ்வாறான வளர்ச்சிக்கு முதலில் தேவையான விஷயம், தேவனுடைய ஆணையோடு கூடிய உடன்படிக்கையில் அதன் மூன்று பகுதிகளிலும் நம்பிக்கை வைப்பதாகும், அதாவது, தேவன் (அ) பரலோக வித்தை முதலில் இருதயத்திலும் மனதிலும் பின்னர் சரீரத்திலும் ஆவிக்குரியதாக்குவார், மேலும் பூமிக்குரிய வித்தை முதலில் இருதயத்திலும் மனதிலும் பின்னர் சரீரத்திலும் பூரணமாக்குவார்; (ஆ) பிசாசு, உலகம் மற்றும் மாம்சத்தின் மீது அவர்களுக்கு ஜெயத்தைக் கொடுப்பார்; மற்றும் (இ) உலகின் அனைத்து குடும்பங்கள், இனங்கள் மற்றும் தேசங்களை ஆசீர்வதிக்க அவர்களை உபயோகிப்பார். (ஆதி. 22:16-18). நமக்குப் பொருந்தும் வாக்குத்தத்தங்களை முழுமையாக நம்புவதன் பலனாக, மெய்யாகவே மேலே குறிப்பிட்டுள்ள தைரியத்தின் நான்கு நிலைகளிலும் வளர முடியும்.

அதே நோக்கத்திற்கு உதவியாக இருக்கும் இரண்டாவது காரியம் : கிறிஸ்துவின் ஊழியம் நமக்குத் தைரியத்தை வளர்க்க உதவும் அனைத்து வெளிப்புற உதவிகளையும் வழங்கும் என்பதை முழுமையாக நம்பியிருப்பதாகும். இந்த கிருபையையும் மற்ற எல்லா கிருபைகளையும் வளர்ப்பதற்குப் போதுமான அறிவூட்டப்படுதல் மற்றும் ஊக்கமளித்தலை வார்த்தையிலிருந்தும், அதை வளர்ப்பதற்கான முழு வல்லமையை ஆவியிலிருந்தும் நமக்குக் கொடுத்து, தைரியத்தை வளர்ப்பதற்கான வாய்ப்புகளின் மத்தியில் நமக்கு அழைப்பு விடுத்து அதில் உதவவும், நமக்குத் தேவையான அனைத்து சூழ்நிலைகளையும் பிற உதவிகளையும் தேவ பராமரிப்பிலிருந்து வழங்கவும் இயேசுவானவர் நம் சார்பாக அவருடைய ஊழியத்தைச் செய்கிறார். நமக்கு இப்படிப்பட்ட ஊழியத்தைச் செய்கிற கிறிஸ்துவின் மீது முழுமையான நம்பிக்கை வைப்பது, இந்தக் கிருபையை வளர்க்க நமக்கு உதவும்.

இந்த நோக்கத்திற்கு உதவியாக இருக்கும் மூன்றாவது விஷயம், (1) நமக்கு இந்தக் கிருபையை வளர்க்க உதவும் அனைத்து உள்ளார்ந்த உதவிகளும் பரிசுத்த ஆவியில் உள்ளன என்ற முழுமையான உறுதிப்பாட்டை நாம் பெற்றிருக்கிறோம். (2) புதிய சித்தமாக இருக்கும் பரிசுத்த ஆவி அதற்குத் தேவையான அனைத்து உறுதியையும் நமக்குத் தருகிறது, (3) நமது மூளைத் திறன்கள் அனைத்திலும் உள்ள பரிசுத்த வல்லமைகள் தைரியத்தைப் பயிற்சி செய்வதற்கான அனைத்து உள்ளார்ந்த திறன்களையும் நமக்குத் தருகிறது, மற்றும் (4) புதிய சித்தம் என்னும் அந்த மனப்பான்மை இந்தப் பரிசுத்த திறன்களைப் பயிற்சி செய்வதின் மூலம் நம்மில் உருவாக்கியுள்ள, மேலே குறிப்பிடப்பட்ட நான்கு நிலைகளிலும் நம்மை வளரச் செய்கிறது.

அதை வளர்ப்பதற்குத் தேவையான நான்காவது விஷயம் வெற்றிக்கான நம்பிக்கை. நம்பிக்கை இழப்பினால் பிறந்த ஒரு வகையான தைரியம் உள்ளது, ஆனால் அவ்வகையானது கிறிஸ்தவ தைரியம் அல்ல. கிறிஸ்தவ தைரியமானது, அதன் முக்கிய ஆதாரங்களில் ஒன்றாகிய

வெற்றிக்கான நம்பிக்கையைக் கொண்டிருப்பதாகும். வீரத்தை வளர்த்துக் கொள்ள விரும்புகிற எவரும் பிசாசும், உலகமும், மாம்சமும் – பாவம், தப்பறை, தன்னயம் மற்றும் உலகத்தனத்தின் பல்வேறு வெளிப்பாடுகளை, அவர்–களுக்கு எதிராகத் திறமையாகக் கையாளும் போது, அவைகள் மீது வெற்றிபெறும் நம்பிக்கையை மனதிலும், இருதயத்திலும், சித்தத்திலும் இடைவிடாமல் கொண்டிருக்க வேண்டும். தன்னுடைய ஏக்கம் நிறைந்த கண்களுக்கு முன்பாக, பரிசைப் பெறுவதற்கான நம்பிக்கையைக் கொண்டிருப்பது, தைரியத்தை வளர்த்துக் கொள்ள ஒருவனுக்கு பெரிதும் உதவும்.

தைரியத்தின் வளர்ச்சிக்கு உதவும் ஐந்தாவது விஷயம் அன்பாகும்; தேவன் மற்றும் கிறிஸ்துவின் மீது முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் செலுத்தும் கடமை அன்பு மற்றும் தன்னலங்கருதாத (சுயநலமற்ற) அன்பாகும். சுயத்தை விட சகோதரர்கள், உலகம் மற்றும் சத்துருக்கள் மீதுள்ள கடமை அன்பும், தன்னலமற்ற அன்பும் அவரை தனது சொந்த பாதுகாப்பையும் பிற நலன்களையும் மறக்கச் செய்து, தவிர்க்க முடியாத ஆபத்துகளில் புத்திசாலித்தனத்துடன் மூழ்கி, துணிவான மற்றும் வீரமான செயல்களைச் செய்யவில்லையெனில் அவர் போதுமான தைரியம் இல்லாதவராயிருக்கிறார்; ஏனெனில் அன்பு தன்னை மறந்து மற்றவர்களின் நலன்களை நாடுகிறது; மேலும் அதில் உள்ள ஆபத்துகளைப் பற்றி அல்ல, மாறாக மற்றவர்களின் நலனைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறது. அத்தகைய அன்பு இயேசுவை தனது சிலுவையை எதிர்கொள்ளவும், பவுலை அவரது பல ஆபத்துகளை எதிர்கொள்ளவும் (1 கொரி. 11:23), பேதுரு மற்றும் யோவானை நியாயசங்கத்தின் கோபத்தினை எதிர்கொள்ளவும் (அப்போஸ்தலர் 4), பரிசுத்தவான்கள், இரத்தசாட்சிகள் மற்றும் கிறிஸ்துவை அறிக்கையிடுபவர்–களை ரோமானிய கொடூர அரங்குகளின் ஆபத்துகள், போப்புமார்க்க விசாரணைகள், சிலுவைப் போர்கள் மற்றும் புராட்டஸ்டண்ட் அமைப்பினுடைய துன்புறுத்துபவர்களின் கோபத்தை எதிர்கொள்ளவும் செய்தது.

இந்தக் கிருபையை வளர்ப்பதற்கான ஆறாவது வழி தைரியத்தைப் பயிற்சி செய்வதாகும்; ஏனென்றால், ஒரு விஷயத்தைச் செய்வதன் மூலம் அதைச் செய்வதைக் குறித்தும், அதைச் செயல்படுத்துவதன் மூலம் அதை வளர்க்கவும் கற்றுக்கொள்கிறோம். இது பயிற்சியின் அனைத்து களங்களிலும், – அதாவது, சரீரம், மனம், கலை, ஒழுக்க நெறி மற்றும் மத ரீதியான தளங்களிலும் உண்மையாயிருக்கிறது.

ஏழாவதாக, நம்மையும், நம்முடன் தொடர்புடைய ஆபத்துகள், அந்த ஆபத்துகளைப் பற்றியும், பாதையில் உள்ள பகைவர்கள் பற்றியும், கட்டாயமாகச் செய்ய வேண்டிய விஷயங்கள், அவற்றைச் செய்யும் முறைகள், மனப்பான்மை மற்றும் விதம் ஆகியவற்றைக் குறித்ததான சரியான மதிப்பீடு தைரியத்தை வளர்ப்பதற்கு உதவியாக இருக்கும். இந்த ஏழு விஷயங்களையும் நாம் செய்கையில், தைரியத்தை அதன் வளர்ச்சியிலும், பலப்படுத்துதலிலும், சமநிலைப்படுத்துதலிலும் மற்றும் படிகமாக்குதலிலும் நிச்சயமாக நாம் வளர்ப்போம்.


## தைரியத்தைக் குன்றச்செய்தல்

ஒரு சமயத்தில் கொண்டிருந்த தைரியத்தை அழிக்கவும் முடியும். அதன் அழிவுக்கு வழிவகுக்கும் விஷயங்கள் அதனை பயிற்சி செய்யாமை, அச்சம் கொள்தல் மற்றும் கோழைத்தனம் ஆகியவையாகும். நிச்சயமாக இவைகள், அதன் அழிவுக்கு வழிவகுக்கின்றன, ஏனெனில் சந்தேகத்திற்கு இடமின்றி, அவைகள் முதலில் அதை அடக்கு வதற்கும், பின்னர் அதை ஒழிப்பதற்கும் வழிவகுக்கின்றன. இவைகளுக்கு எதிராக செயல்பட, தைரியத்தின் செயல்பாட்டிற்கு அழைப்பு விடுக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாம் அதைப் பயன்படுத்த வேண்டும், மேலும் நமது மனம், இருதயம் மற்றும் சித்தத்திலிருந்து அச்சத்தையும் கோழைத்தனத்தையும் விரட்டியடிக்க வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட நான்கு நிலைகளின் பல்வேறு அளவுகளில் வளர்க்கப்பட்ட நமது தைரியத்தை, பலவிதமான சோதனை–யான அனுபவங்கள் மற்றும் சூழ்நிலைகளுக்கு மத்தியில் பரீட்சைகளுக்கு உட்படுத்துவதில் தேவன் பிரியப்படுகிறார்.

தேவனுக்கு பிரியமானபடி இந்த பரீட்சைகளில் நிலைத்து நிற்பவன் பாக்கியவான். மற்ற விஷயங்கள் சமநிலையில் இருக்கும் பட்சத்தில், தங்கள் தைரியத்துடன் நற்குணங் களையும் இணைத்தபின் குணசாலிகளாக இருக்கும் அந்தத் தைரியமானவர்களுக்கு காத்திருக்கும் மாபெரும் வெற்றியில் அவரும் பங்கடைவார். பேரரசை விரிவுபடுத்திய ஒரு வெற்றிகரமான ரோமானிய தளபதி, வெற்றியுடன் திரும்பி வரும்போது, ஒரு வெற்றிவிழா கொண்டாடப்படுவது வழக்கமாயிருந்தது. அவர் அந்த விழாவின் நாயகனாக இருந்தார், அவருக்கு கைத்தட்டிப் பாராட்டுதல், மரியாதை மற்றும் அதிகாரம் என மனிதர்களால் அளிக்கப்படக் கூடிய அனைத்து கௌரவங்களும் வழங்கப்பட்டன.

ஆனால் தேவனுடைய சேனையில் மிகவும் தேர்ந் தெடுக்கப்பட்ட நான்கு படைப் பிரிவுகளில் – அதாவது, சிறுமந்தை, மூப்பரான பாத்திரவான்கள், திரள்கூட்டம் மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் ஆகிய ஜெயங் கொண்டவர்களின் வெற்றிகளுடன் ஒப்பிடும்போது அந்த வெற்றிகள் உண்மையில் சிறியவைகளாயிருந்தன. அவர்கள் பரலோகத்திலும் பூமியிலும் உள்ள அனை–வராலும் பாராட்டப்படுவார்கள்! தேவன் இயற்றக்கூடிய இனிமையான இசையை தேவதூதர்களின் பாடகர் குழுக்–கள் இசைப்பார்கள், பூமியின் மனிதர்களும் பல்லவியில் இணைவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த நான்கு படைப் பிரிவுகளும் மதிப்பாய்வு நிலையைக் கடந்து செல்லும்போது, அவர்கள் ஒவ்வொருவரையும் அவர்களின் படைத் தளபதி

அவர்களுடைய ராஜாவிடம் சுட்டிக்காட்டி அவர்களின் பராக்கிரமத்தைப் பற்றிக் கூறுவார்; அவர்களுடைய ராஜா அவர்களை புகழ்ச்சியுடனும் பாராட்டுதலுடனும் ஏற்றுக் கொள்வார். அதைப்போலவே, பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களும் பூமியில்பாராட்டப்படுவார்கள், பொல்லாப்பு மேலோங்கி இருக்கும் நிகழ் காலத்தில் வெளிப் படுத்தும் அவர்களுடைய பராக்கிரமம் பரலோகத்திலும், பூமியிலும் ஏற்றுக்கொள்ளப்படும். தைரியமானவர்களின் மற்றும் நல்லவர்களின் வெற்றிவாகை உண்மையில் சிறந்ததாக இருக்கும்! ***




# நம்முடைய வார்த்தைகள் - தேவனுடைய வார்த்தைகள்

Our Words - God's Words

**"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்."** (மத்தேயு 12:34)

அன்பான சகோதரர்களே, மூப்பரான பாத்திரவான்கள், சிறுமந்தை, திரள்கூட்டம், வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர் ஆகியோரை வளர்த்தெடுப்பதில் எழுதப்பட்ட மற்றும் பேசப்பட்ட பல வார்த்தைகளை நீங்கள் எப்போதாவது சிந்தித்திருக்கிறீர்களா? இந்த நியாயத் தீர்ப்பும் இந்தத் தெரிந்தெடுத்தலும் எந்த கோட்பாடுகளின் அடிப்படையில் செய்யப்படுகின்றன என்பதைக் கருத்தில் கொள்ளும் போது, அனைவரும் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும். இந்தச் செயல்பாட்டில் நம்முடைய உதவிக்காக, இந்தக் கட்டுரையில் பின்வரும் வசனத்தைக் கருத்தில் கொள்வோம்: "**...இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள்** [பயனற்ற அல்லது தீங்கு விளைவிக்கும்] **யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்.**" (மத். 12:34-37).




நம்முடைய கர்த்தரின் இந்த வார்த்தைகள், இருதயமும் வாயும் மிகவும் பிரத்தியேகமான கண்காணிப்பின் கீழ் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன, முந்தையது தனிப்பட்டவரின் குணாம்சத்தை குறிக்கிறது, பிந்தையது குணத்தின் அளவுகோலாக இருக்கிறது. இந்த விஷயத்தைப் பற்றிய அதே பார்வையில்தான் பின்வரும் ஞானமான வார்த்தைகள் எழுதப் பட்டுள்ளன, "**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும். வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து.**" (நீதிமொழிகள் 4:23,24).

சரியான வார்த்தைகளுக்கு சரியான இருதய நிலைப்பாடு அவசியம் என்பதற்கான அறிகுறி தெளிவாகிறது; ஏனெனில், அனுபவம் ஒவ்வொரு மனிதனுக்கும் சாட்சியமளிக்கிறது போல, "**இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.**" எனவே அவர் நம்மிடம் கூறுவது போல, நம்முடைய வார்த்தைகளே, கர்த்தருடைய மதிப்பீட்டில் நியாயத்தீர்ப்பின் அளவுகோலாக இருக்க வேண்டும் என்பதே நியாயமானதாயிருக்கிறது. தேன் கலந்த வார்த்தைகள் சில நேரங்களில் ஆழமான மாய்மாலத்தின் முகமூடிகளாக மட்டுமே இருக்கிறது என்பது உண்மைதான்; ஆனால் ஒரு சுயநலக் கொள்கையானது தந்திரங்களை மாற்றுவதை அவசியமாக்கும்போது, அந்த முகமூடி எப்போதாவது கழன்றுவிடும் என்பது உறுதி. எனவே, வார்த்தைகள், உரையாடல் மற்றும் நடத்தையின் முழுப் போக்கும் இருதயத்தின் அளவுகோலாக இருக்கிறது என்பதே உண்மையாயிருக்கிறது.

ஆகையால், நமது முதல் அக்கறை இருதயத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும் – அதாவது, அதன் விருப்பங் களும் மனப்பான்மைகளும் முற்றிலும் தெய்வீக கிருபை

யினுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும்; சத்தியம் மற்றும் நீதியின் ஒவ்வொரு கோட்பாடும் அங்கு சிங்காசனத்தில் அமர்த்தப்பட வேண்டும்; நீதி, இரக்கம், தயவு, சகோதர சிநேகம், அன்பு, விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், தேவன் மற்றும் கிறிஸ்துவின் மீது உச்ச அளவிலான பயபக்தி, மற்றும் பரிசுத்தத்தின் அழகுகள் அனைத்தின் மீதும் கொண்ட ஆழமான அன்பு முதலியவை வாழ்க்கையின் ஆளுகை செய்யும் கோட்பாடுகளாக உறுதியாக நிலைநிறுத்தப்பட வேண்டும். இருதயத்தில் இந்தக் கோட்பாடுகள் உறுதியாக்கப்பட்டு நிலைநிறுத்தப்பட்டால், இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து சத்தியமான, நிதானமான, ஞானமான மற்றும் கிருபையான வார்த்தைகளையே வாய் பேசும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு சம்பந்தப்பட்டமட்டில், அவருடைய இருதயம் பரிபூரணமாயிருந்தது - அதாவது, அவரிடத்தில் பாவமில்லை, அவருடைய வாயில் வஞ்சனையும் காணப்படவில்லை, "**உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது**" என்று கூறப்பட்டிருந்தது, மறுபடியும், "**எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்**" என்றும் கூறப்பட்டுள்ளது. (சங். 45:2; லூக்கா 4:22). மோசே கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, கர்த்தருடைய வார்த்தைகளின் ஆசீர்வாதமான செல்வாக்குகளை இவ்வாறு முன்னறிவித்து, கூறுகிறார், "**மழையானது இளம்பயிரின்மேல் பொழிவதுபோல, என் உபதேசம் பொழியும்: பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, என் வசனம் இறங்கும்.**" (உபா. 32:2). மேலும் இயேசு, கூறினார் "**நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.**" (யோவான் 6:63).

கர்த்தருடைய வார்த்தைகள் அதுபோல் ஞானமும், நீதியும், உண்மையுமாயிருந்தன, அவருடைய சத்துருக்கள் தொடர்ந்து ஏதாவது குறை கண்டுபிடிக்க முயன்றாலும், "**அவர்கள் அவரை ஜனங்களுக்கு முன்பாகப் பேச்சிலே குற்றம்பிடிக்கக்கூடாமல், அவர் சொன்ன உத்தரவைக் குறித்து ஆச்சரியப்பட்டு, மவுனமாயிருந்தார்கள்**" என்று கூறப்பட்டிருக்கிறது. (லூக்கா 20:26). மற்றவர்கள் சொன்னார்கள், "**அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை.**" (யோவான் 7:46).

இவ்வாறாக, நம்முடைய கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு ஒரு தகுதியான முன்மாதிரியை விட்டுச் சென்றிருக்கிறார், அதைப் பின்பற்றும்படி அப்போஸ்தலர் அனைவரையும் வலியுறுத்திக் கூறுகிறார், "**உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும்** [வெளிப்படையான அன்புடனும் தயவுடனும்] **உப்பால் சாரமேறினதாயும்** [சுத்திகரிக்கும் மற்றும் பாதுகாக்கும் வல்லமை] **இருப்பதாக.**" (கொலோ. 4:6). மேலும் பேதுரு கூறுகிறார், "**ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்.**" (1 பேதுரு 4:11); ஞானமாகவும், கர்த்தருடைய ஆவிக்கும் வார்த்தைக்கும் இணக்கமாகவும் போதிக்கக்கடவன். மீண்டுமாக எழுதப்பட்டுள்ளதாவது: "**உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.**" (சங். 34:13). "**தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்.**" (நீதி. 21:23). "**ஞானியினுடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள்: மூடனுடைய** [ஞானமற்றதாகவும், அஜாக்கிரதையாகவும் பேசுகிற ஒருவன்] **உதடுகளோ அவனையே விழுங்கும். அவன் வாய்மொழிகளின் துவக்கம் மதியீனமும், அவன் வாக்கின் முடிவு கொடிய பைத்தியமுமாம்.**" (பிரசங்கி 10:12,13). "**தேவ சமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு: தேவன் வானத்திலிருக்கிறார்: நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக**" என்று மறுபடியும் எழுதப்பட்டுள்ளது. (பிரசங்கி 5:2).

யோபுவினுடைய இருதயத்தின் அளவுகாட்டியாக வார்த்தைகளைக் கர்த்தர் எடுத்துக்கொண்டார், மேலும் அவன் இருதயத்தையும் வார்த்தைகளையும் சரியாக வைத்திருப்பதில் கவனமாக இருந்து, "**தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும்** [பேரழிவுகள், உபத்திரவங்கள் - ஒழுக்கப்பயிற்சிக்காக அல்லது சுத்திகரிப்புக்காக] **பெற வேண்டாமோ?**" என்று கூறினான். (யோபு 2:10). "**கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்: கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.**" (யோபு 1:21). கடுமையான பரீட்சைகளின் கீழ், அதுவும், அவற்றை அனுமதிப்பதில் தெய்வீக ஞானத்தைப் பற்றிய தெளிவான கருத்துப் புரிதல் இல்லாத நிலையிலும் அன்பான அர்ப்பணிப்பு, பொறுமை மற்றும் விசுவாசம் நிறைந்த வார்த்தைகள் மிகுதியாக வந்த ஒரு இருதயத்தில் கலகத்தின் ஆவி இல்லை. சங்கீதக்காரன் பிரதிஷ்டை செய்து, சோதிக்கப்பட்ட தேவனுடைய ஜனங்களின் வாய்களில் உறுதியான தீர்மானத்தின் இந்த வார்த்தைகளை வைக்கிறார்: "**என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன்** [நீதிமான்களை சோதித்து பரீட்சிப்பவன்] **எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன்.**" (சங். 39:1).

வாயைக் கட்டுப்படுத்துவதில் எனக்கு மிகவும் பிடித்த வசனம், சங்கீதம் 141:3, "**கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்: என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்.**" நிச்சயமாக, நம்முடைய உதடுகள் மௌனமாக இருக்க வேண்டிய நேரங்கள் உள்ளன. தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாக, தீமையான அல்லது அலட்சியமான முறையில் பேசும் நாவைக் கட்டுப்படுத்த நமக்கு பயம் நிறைந்த பொறுப்பு உள்ளது. நமக்கு எந்தவிதமான சிரமம் இருந்தாலும், நம்முடைய உதடுகளுக்கு, நம்முடைய இருதயங்களில் இருந்து திருத்தம் தேவைப்படுகிறது.

# பேதுருவிடமிருந்து வரும் ஆறுதலான வார்த்தைகள்

1 பேதுரு 5:7, "**அவர் உங்களை விசாரிக்கிறவரான–படியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.**" இந்த ஆறுதலான வார்த்தைகள், வாழ்க்கையில் குழப்பமான கவலைகளும் சிரமங்களும் நமது பங்காக இருப்பதை உணர்கிற, முழுமையாகப் பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளுக்குச் சொல்லப்படுகின்றன. வாழ்க்கையின் இந்தக் கவலைகள் உலகத்தைச் சேர்ந்த சிலருக்கு அதிகமாகவும், சிலருக்கு குறைவாகவும் கூட வருகின்றன. ஆனால் அவைகள் நிச்சயமாக **கர்த்தருடைய** பிள்ளைகளாகிய அனை–வருக்கும் வருகின்றன.

கவனித்துக் கொள்ளுதல் (care) என்ற சொல் இரண்டு விதங்களில் பயன்படுத்தப்படுகிறது. சரியான சிந்தனையைப் பயிற்சி செய்தல், நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவற்றில் அல்லது நமது பொறுப்பில் உள்ளவற்றில் சரியான கவனம் செலுத்துதல் என்ற அர்த்தத்தில் இந்த வார்த்தையைச் சிந்திப்பது, நம்முடைய பாடத்தின் தலைப்பு வாக்கியத்தை தவறாகப் புரிந்துக்கொள்வதற்கான ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். இருப்பினும், கவனித்துக் கொள்ளுதல் என்ற வார்த்தையானது, பெரும்பாலும் துக்கம், மனக் குழப்பம் என்ற சிந்தனையைத்தான் கொண்டுள்ளது; இந்த இடத்தில் அப்போஸ்தலனால் இது இவ்வாறே பயன்படுத்தப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல், "**நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாமல்**" என்று கூறுகிறார் – அதாவது, எதைக் குறித்தும் கவலைப்படாதீர்கள் என்றும், எதைக் குறித்தும் வருத்தப் படாதீர்கள் என்றும் கூறுகிறார். எனவே, அவர் உங்களைக் கவனத்தில் கொண்டிருக்கிற படியால், உங்கள் கவலை–களையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் என்று பரிசுத்த பேதுருவின் வார்த்தைகளை நாம் மொழி–பெயர்க்கலாம்.

நாம் எல்லாப் பொறுப்புணர்வுகளையும் தூக்கி எறிந்து–விட்டு, நாம் என்ன செய்கிறோம் என்று கவனிப்பதையும், நமது கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து அக்கறை காட்டுவதையும் நிறுத்தி விட வேண்டும் என்பது அப்போஸ் தலரின் அறிவுரை அல்ல. இதன் சரியான அர்த்தத்தில், எதைக்குறித்தும் கவலை கொள்ளாத ஆணோ பெண்ணோ, வாழ்க்கையில் எந்தப் பொறுப்புக்கும் முற்றிலும் தகுதியற்ற–வர்கள் என்பதை நிச்சயமாகவே, நாம் அனைவரும் ஒப்புக்கொள்கிறோம்.

தேவனுக்குப் பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகவும், மனிதர்களுக்கு முன்பாக அவருடைய பிரதிநிதிகளாகவும் இருக்கிற நாம், உலகத்தாரின் போக்கில் சென்று பெருந் தவறுகளைச் செய்வதோ அல்லது அது சகோதரர்களாக இருந்தாலும், உலக மக்களாக இருந்தாலும் தேவை–



"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்."
நீதிமொழிகள் 4:23

யில்லாமல் மற்றவர்களைத் தொந்தரவு செய்வதோ இல்லை. அற்ப விஷயங்கள் என்று அழைக்கப்படக்கூடியவை, ஆனால் உண்மையில் அப்படி இல்லாதவற்றில் கவனம் செலுத்தாதது நன்மைக்கான நமது செல்வாக்கைப் பெரிதும் பாதிக்கலாம். அர்த்தம் நிறைந்த ஒரு சாதாரணமான பழமொழி உண்டு: "அற்ப விஷயங்கள் பரிபூரணத்தை உருவாக்குகின்றன; பரிபூரணம் அற்ப விஷயமல்ல." **கர்த்தருடைய** ஜனங்களே உலகில் மிகவும் கவனமிக்க ஜனங்களாக இருக்க வேண்டும். ஆம், பிரபஞ்சத்திலேயே தேவன் தான் மிகவும் கவனமுள்ளவர் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம், மேலும் நாமும் அவரைப் போலிருக்க ஊக்குவிக்கப்படுகிறோம்.

1 பேதுரு 5:7–ல் அந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கும் அர்த்தத்தில் – அதாவது, கவலை மற்றும் மன அமைதியின்மை என்ற அர்த்தத்தில் தேவன் கவன–மில்லாதவர் அல்ல – ஆனால் சரியானதும் முறைமை–யானதுமான அர்த்தத்தில் அவர் கவனமுள்ளவராகவே இருக்கிறார். **கர்த்தருடைய** ஜனங்கள் சத்துருவால் துன்புறுத்தப்படுவதால் அவர்களுக்கு கவலைகள் வருகின்றன. இந்த அனுபவங்களை, தம்முடைய ஜனங்கள் தங்கள் கவலையை அவர் மேல் வைப்பதற்கும், அவர்களைத் தம்மிடம் நெருங்கி வரச் செய்வதற்கும், பொறுமையுடன் சகிக்கும் தன்மையை அவர்களுக்குக் கற்பிப்பதற்கும், தம்முடைய தேவையை அவர்களுக்கு இன்னும் முழுமையாகக் காண்பிப்பதற்கும், அவர் இல்லா–மல் அவர்களின் முழு உதவியற்ற பரிதாபத் தன்மையை காண்பிப்பதற்கும், அதில் அவர்களை வழிநடத்தும் உயர்ந்த நோக்கில் **கர்த்தர்** அனுமதிக்கிறார்.

# தம்முடைய பிள்ளைகளை நம்முடைய பிதா கவனிக்கிறார்

ஒரு கிறிஸ்தவன், வாழும் ஒவ்வொரு நாளும் **கர்த்தரை** அதிகமதிகமாகச் சார்ந்திருக்க வேண்டும். காட்டு புஷ்பங் களையும், ஆகாயத்துப் பறவைகளையும் போஷிக்கிற நம்முடைய பரலோகத் தகப்பன், புஷ்பங்களையோ அல்லது

பல பறவைகளையோ விட தம்முடைய பிள்ளைகளை அதிகமாக கவனிக்கிறார் என்பதையும், உலகத்திற்கான ஒரு திட்டத்தை – அதாவது, ஏற்ற காலத்தில் அவர்களை ஆசீர்வதிப்பதற்கான ஏற்பாட்டினையும் அவர் கொண்டிருக்கிறார் என்பதையும், அவன் முன்பை விட முழுமையாக உணர வேண்டும். ஆனால் நாம் ஏற்கனவே கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்குள் பிரவேசித்துவிட்டோம்; நாம் ஏற்கனவே அவருடைய பிள்ளைகளாகிவிட்டோம், அவருடைய விசேஷித்த கவனிப்பில் தான் இருக்கிறோம். மேலும் "**தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு** [அவரிடத்தில் பயபக்தியுடன் இருப்பவர்களுக்கு] **இறங்குகிறார்.**" (சங். 103:13).

## மகிமையான சுதந்திரம்

வகுப்பறையின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு, பள்ளி முற்றத்தின் சுதந்திரத்திற்குள் சென்று, பெரும்பாலும் புரிந்துகொள்ள கடினமான பாடங்களைக் கற்றுக் கொள்ளும் அழுத்தங்களிலிருந்து சிறிது நேரம் தப்பித்து, விளையாட்டு மைதான விளையாட்டுகளில் நமது சரீர ஆற்றலை செலவழிக்க விலைமதிப்பற்ற 15 நிமிடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் அனுமதிக்கப்பட்டதில், ஏற்பட்ட நமது குழந்தைத்தனமான மகிழ்ச்சியை நம்மில் எத்தனை பேர் நினைவுகூர முடியும்? நாம் மகிழ்ச்சியால் கிட்டத்தட்ட கட்டுப்பாடற்று காணப்பட்டோம், சற்று பின்னோக்கிப் பார்த்தால், சரீரம் மற்றும் மனதின் ஆரோக்கியத்திற்காக இந்த செயல்பாட்டின் பெரும் மதிப்பை அங்கீகரித்த நம் ஆசிரியர்களின் ஞானத்தைப் பாராட்ட முடிகிறது.

நம் பெற்றோரும், நீண்ட பள்ளி விடுமுறை நாட்களில், நாம் என்ன செய்யப்போகிறோம் என்று எப்போதும் அதிகமாக விசாரிக்காமல், நமது விளையாட்டுகளை விளையாடவோ அல்லது நமது சாகசங்களை செய்யவோ, மதிய உணவு தயார் செய்து கொடுத்து நம்மை அனுப்பினர், அந்த சுதந்திரம் பூர்வமானதாயிருந்தது, இருப்பினும், வருந்தத்தக்க வகையில் காலங்கள் மாறிவிட்டன, குழந்தைப் பருவம் முன்பு போல கவலையற்றதாகவோ அல்லது களங்கமற்றதாகவோ இல்லை. ஆயினும்கூட, சுதந்திரமான மனநிலை மற்றும் அபரிமிதமான இயற்கை ஆர்வத்துடனும் தகவல்களை உள்வாங்கும் திறனுடன் பிறக்கிற குழந்தைகள் அநேகம் கற்றுக் கொள்ளலாம் – அதாவது, அந்த வளரும் பருவங்களில் வாழ்க்கைப் பள்ளியில் வலியின்றி அவர்களால் கற்றுக்கொள்ள முடியும்.

## பிள்ளைகள் ஒழுக்கப் பயிற்சியைப் பாராட்டுகிறார்கள்

எல்லா பிள்ளைகளையும் போலவே, நாமும் சில சமயங்களில் அடங்காதவர்களாக இருந்தோம், ஆனால் சில விதிகளைக் கடைப்பிடித்தால் மட்டுமே நமக்குச் சுதந்திரம்




உண்டு என்ற நிபந்தனை இருந்தது என்பதையும், அந்த விதிகளை மீறுவது தகுதியான தண்டனையைக் கொண்டு வரும் என்பதையும் அறிந்திருந்தோம். ஒழுக்கப்பயிற்சி என்பது வேதாகம கருத்தாய் இருந்தது என்பதையும், வளர்ச்சியடைந்தவர்களின் உலகத்தில் நமது ஸ்தானத்தை அடைவதற்கு நம்மைத் தயார்படுத்துவதில் அதன் சரியான பயிற்சி மிக முக்கியமானது என்பதையும் நமது இளமைப் பருவத்தில், நம்மில் பலர் கற்றுக்கொண்டோம். அவிசுவாசிகள் கூட பெரும்பாலும் இந்த பெற்றோர்களுக்குரிய பொறுப்பை புறக்கணிக்கவில்லை. சில சமயங்களில், ஒழுக்கப்பயிற்சி மிகவும் அடக்குமுறையாக மாறிவிடுகையில், பயந்த சுபாவமுள்ள பிள்ளைகளின் வளர்ச்சி தடைபட்டிருக்கிறது. ஆனால் நாம் இப்போது பெற்றோர்களாகவும், தாத்தா பாட்டியாகவும் இருந்தால், பெற்றோர்களுக்குரிய கடுமையான சவால்களை நாம் நன்கு புரிந்து கொள்ள முடியும். "**பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து: அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.**" நீதிமொழிகள் 22:6.

## அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்

"**அப்பொழுது, சிறு பிள்ளைகளை அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்: கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு, ...சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்: அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்: தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.**" (மாற்கு 10:13, 14). அற்புதமான சிந்தனை! தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. இயேசு அவருக்குச் செவிகொடுத்தவர்களுக்கு மனதில் பதியச் செய்த சத்தியம் என்ன? நிச்சயமாக ஒரு சிறு பிள்ளையின் எளிமை, நேர்மை மற்றும் நம்பும்தன்மை ஆகியவை பரலோகத் தகப்பனின் பிள்ளைகளாக மாற விரும்பும் அனைவருக்கும் அவசியமான குணாம்சங்கள் என்பதே அந்த சத்தியமாயிருந்தது. – ஒரு அழகான கருத்தாயிருந்தது.

மேலும், "**நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**" (மத். 18:3). பரிசுத்த பவுலும் கூட மேலும் நமக்கு இவ்வாறு அறிவுறுத்துகிறார்: "**துர்க்குணத்திலே குழந்தைகளாயும்,** (உங்கள்

சிந்தனையில் முதிர்ந்தவர்களாயிருங்கள்) **புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்.**" (1 கொரி. 14:20, NIV). குழந்தைப் பருவத்தின் எளிமையோடு முதிர்ச்சியின் ஞானமும் இணைந்த குணாம்சமுடைய ஒரு ஆணையோ அல்லது ஒரு பெண்ணையோ சந்திப்பது அரிதாயிருப்பது வருந்தத்தக்கது. மேலும் அந்தோ பரிதாபம் ஒருமுறை இழந்த களங்கமில்லா குணத்தை மீண்டும் பெறுவது கடினம்.

சாலொமோன் தேவ ஆவியால் ஏவப்பட்டு பேசின தனது ஞானத்தில், "தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்" என்று கூறினார் (நீதி. 29:18). ஒரு காலத்தில் சிறு குழந்தைகளாக வாழ்க்கையை வியப்புடன் பார்த்த நாம், அந்தக் கண்ணோட்டத்தைப் புதுப்பிக்க வேண்டும். அந்தக் கண்ணோட்டம் என்ன? இது, "**தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரம்... மேன்மையான பரமதேசம்**" என்ற ஆபிரகாமின் இலட்சியத்திற்கு ஒத்ததாகும். (எபி. 11:10,16). தேவனுடைய ராஜ்யம் பூமிக்கு வருமென்பதும், அவருடைய சித்தம் எல்லா மனிதர்களிடமும் செய்யப்படும் என்பதுமான இந்த நம்பிக்கையினால் நாம் இரட்சிக்கப்பட்டோம். உலகத்தை ஆசீர்வதிப்பேன் என்று தேவனுடைய ஆணையோடு கூடிய வாக்குத்தத்தமானது, ஆத்துமாவின் நங்கூரமாக சபைக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையாயிருந்தது, மேலும் ஏற்ற காலத்தில் தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுதந்திரத்திற்குள் அனைவரும் பிரவேசிப்பார்கள். (ரோமர் 8:21; எபி. 6:13-19).

## ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தைகள்

சுவிசேஷ யுகத்திலும், குறிப்பாக அதன் விரிவாக்கப்பட்ட அறுவடை வேலையிலும், தேவனுடைய ஜனங்கள் மத்தியில் அவருடைய பிரதிநிதிகளாகவும், ஊழியர்களாகவும் உரிமை கொண்டாடிய தலைவர்களுக்கு தேவனுடைய அறிவூட்டும் வார்த்தைகள் மீண்டும் வந்தன. மனந்திரும்புதலைக் குறித்தும், வரவிருக்கும் ராஜ்யத்தையும் நியாயத்தீர்ப்பையும் குறித்த ஒரு செய்தியை எல்லாருக்கும் பிரசங்கிக்க தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டார். தேவனுடைய வார்த்தை இஸ்ரயேலுக்கு மட்டுமல்ல, உலகெங்கிலும் உள்ள மனுக்குலம் அனைத்துக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டியதாயிருந்தது. (அப்போஸ்தலர் 1:8). அது சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த இயேசுவை இரட்சகராகவும், கர்த்தராகவும், ராஜாவாகவும் விசுவாசிப்பதைக் குறித்தும், பிரதிஷ்டையைக் குறித்தும் (ரோமர் 12:1), தெரிந்தெடுக்கப்பட்டவர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்தும், வரவிருக்கும் உலகளாவிய இக்கட்டு குறித்தும், வரவிருக்கும் ராஜ்யம் மற்றும் அதனுடன் கூடிய தேர்ந்தெடுக்கப்படாதவர்களுக்கான திரும்பக்கொடுத்தலையும், குறித்த செய்தியாக இருக்க வேண்டியதாயிருந்தது. (1 தீமோத்தேயு 2:4-6; 4:10; 1 யோவான் 2:2). வேறு எந்த செய்தியையும் அல்ல, இந்த செய்தியையே (நான் உனக்குக் கற்பித்ததைப் பிரசங்கி) அறிவிக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். ஆனால் மாபெரும் வீழ்ச்சி வந்தது (அப்போஸ்தலர் 20:30; 2 தெச. 2:3), பேராவல் கொண்ட தலைவர்கள் தேவன் தங்களுக்குக் கட்டளையிடாதப் பல விஷயங்களைப் பிரசங்கித்தார்கள்.

சுவிசேஷ யுகமும், மனுக்குலத்திற்கு அது அளித்த சாட்சியமும் முன்னேற்றமடைந்த போது, நித்திய வேதனைக் கொள்கையும் மற்ற தப்பறைகளும் பிரசங்கிக்கப்பட்டது; அது வேதாகமப் போதனைகளான பாவத்தின் சம்பளம் மரணம், மனித ஆத்துமாவின் மரணமடையும் தன்மை போன்ற மரணத்தைக் குறித்ததான பிரசங்கத்தைப் படிப்படியாக மாற்றியமைத்தது, இதனால் பெயரளவிலான சபை பிரசங்கியார்களும், மிஷனரிகளும், புறஜாதியினருக்கும், மற்றவர்களுக்கும் இரட்சிக்கப்படாத அவர்களின் முன்னோர்கள் அக்கினியில் நித்திய வேதனையில் இருப்பதாகவும், மேலும் இந்த ஜீவியத்தில் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்களும் கூட அவ்வாறே வேதனைப்படுவார்கள் என்றும் கூறினர். 1874-ல் அல்லது அதற்குப் பின் சிறிது காலத்திலேயே ரஸல் போதகரும், மற்றவர்களும் 1914-ல் புறஜாதியாரின் காலம் நிறைவடைவதையும் (p-2, முன்னுரை, vi), வரவிருக்கும் மகா இக்கட்டுக் காலத்தையும் குறித்து பிரசங்கிக்கத் தொடங்கினர். சில புத்தியில்லாத கன்னிகைகள் (மத். 25:1-12) உட்பட சில பெயரளவிலான சபையின் வாய்க் கருவியாக செயல்பட்டவர்களும் 1914-ல் புறஜாதியாரின் காலம் நிறைவடையும் என்பதைப் பிரசங்கிக்கத் தொடங்கினர். இருப்பினும், 1914-க்குப் பிறகு மனுக்குலம் இரட்சிப்படைவதற்கான வாய்ப்பு முற்றிலும் இருக்காது என்றும், அதற்குள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத அனைவருக்கும் தேவனுடைய கோபாக்கினையும், அக்கினியில் நித்திய வேதனையும் மட்டுமே இருக்கும் என்றும் அவர்கள் போதித்தனர்.

ரஸல் போதகரும் மற்றவர்களும், தேர்ந்தெடுக்கப்படாத மனுக்குலத்திற்கான எதிர்கால வாய்ப்பு மற்றும் இழந்து போனதைத் திரும்பக்கொடுத்தல் பற்றி பிரசங்கித்ததன் மூலம், நிறைவேறுதலான யோனா வகுப்பாரின் இந்தத் தப்பறைகளை மறுத்தனர். இந்த இழந்துபோனதைத் திரும்பக்கொடுத்தல் உபதேசமானது, கிறிஸ்துவின் ஆயிரம் வருட மத்தியஸ்த ஆட்சியில் உலக மனுக்குலமானது, அவர்களை மனந்திரும்பவும், கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசிக்கவும், பிரதிஷ்டை செய்வதே, நித்திய அழிவைத் தவிர்ப்பதற்கான உறுதியான வழி என்று அறிவுறுத்துகிற தேவனுடைய செய்தியை விசுவாசிக்கும் என்பதை மனக்கண் முன் நிறுத்துகிறது. இது தொடர்பாக அவர்கள் மனந்திரும்புதலையும், இயேசுவை இரட்சகராக விசுவாசிப்பதையும், தேவன் மற்றும் கிறிஸ்துவின் நிமித்தமாக சுயத்தை வெறுப்பதையும் குறித்து, அவர்களில் சிறியவன்

முதல் பெரியவன்மட்டும் அனைவருக்கும் அறிவிப்பார்கள். (எரே. 31:34).

ஏனெனில், இந்த உலகில் முதன்மையானவர்களாக இருந்த பலருக்கும் தேவனுடைய செய்தி வரும், அவர்கள் ஆயிரம் வருட யுகத்தில் அழிவிலிருந்து தப்பிப்பதற்காக இந்த ஜீவியத்தில் பெற்ற பதவிகளையும், அதிகாரத்தையும் விட்டு விட்டு, மனப்பூர்வமான மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்தி, பூமியில் நித்திய ஜீவனைப் பெறுவதற்கான பாதையில் செல்லத் துவங்குவார்கள். மேலும் தங்கள் மனம், இருதயம், மற்றும் மனிதாபிமானத்தோடு, உண்மையிலேயே மனந்திரும்பி, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கதறவும், தங்கள் பொல்லாத வழிகளையும் கொடுமையையும் விட்டுத் திரும்ப வேண்டும் என்றும் அறிவிப்பார்கள்.

தேவன் தம்முடைய கோபம் அவர்களை அழிக்க அனுமதிக்க மாட்டார், அவர்கள் அழிந்து போக மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் மனுக்குலம் சரியான பதிலளிப்பதாகக் காணப்படுகிறது. அவர்களுடைய கிரியைகளை அவர் காண்கிறார் என்றும் அநேகர் தங்கள் பொல்லாத வழிகளிலிருந்து திரும்பியுள்ளனர் என்றும் மனதில் காட்சிப்படுத்துகிறார். எனவே கீழ்ப்படிதலுள்ளவர்களை அழிக்காமல், செம்மறியாடு வகுப்பைச் சேர்ந்தவர்களாக அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும்படி அவர் தனது செயல் முறையை மாற்றுவதாகவும் காணப்படுகிறது. (வெளி. 20:12). அன்றும், அன்றிலிருந்தும், சகோதரர் ரஸல் மற்றும் பிரகாசமான மனக்கண்களை பெற்ற பலரால் மனக் காட்சியாகக் காணப்பட்ட இந்த விஷயங்கள், நிச்சயமாக கிறிஸ்துவின் ஆயிரம் வருட யுக மத்தியஸ்த ஆட்சியில், இழந்துப்போனதை திரும்பக்கொடுத்தல் தொடங்கிய பிறகு உண்மையில் நடைபெறும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சபைக்கும் உலகத்திற்கும் மீட்பராக வழங்குவதன் மூலம் யேகோவா தேவன் ஒரு வழியை நியமித்துள்ளார்; ஆதாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் ஒரு புதிய சோதனை முறையை அல்லது நியாயத்தீர்ப்பை தேவன் சாத்தியமாக்கியுள்ளார். ஆதாமின் முதல் நியாயத்தீர்ப்பு அல்லது சோதனை நாள் ஏதேனில் இருந்தது. அங்கு அவர் தனது கீழ்ப்படியாமையால் எல்லாவற்றையும் இழந்து, தன் மீதும் தன்னுடைய சந்ததியினர் அனைவர் மீதும் தெய்வீகத் தண்டனையாகிய மரணத்தைக் கொண்டு வந்தார். ஆதாமையும் அவனது இனத்தையும் மீட்டு, அவர்களுக்கு நித்திய ஜீவன் அல்லது நித்திய மரணத்திற்கான மற்றொரு முழுமையான, நியாயமான தனிப்பட்ட பரீட்சை அல்லது நியாயத்தீர்ப்பை வழங்கும் நோக்கத்திற்காக கிறிஸ்து வெளிப்பட்டார். ***

# ஆனால் மாறுபட்ட ஒரு நோக்கத்துடன்

But with a Changed Purpose

**"ராஜஸ்திரீகள் அறுபதுபேரும், மறுமனையாட்டிகள் எண்பதுபேருமுண்டு; கன்னியருக்குத் தொகையில்லை. என் புறாவோ, என் உத்தமியோ (கறைபடாதவள்) ஒருத்தியே; அவள் தன் தாய்க்கு ஒரே பிள்ளை; அவள் தன்னைப் பெற்றவளுக்கு அருமையானவள்; குமாரத்திகள் அவளைக் கண்டு, அவளை வாழ்த்தினார்கள்; ராஜஸ்திரீகளும் மறுமனையாட்டிகளும் அவளைப் போற்றினார்கள்." (உன்னதப்பாட்டு 6:8,9).**

மேலே மேற்கோள் காட்டப்பட்ட வேத வாக்கியங்கள், ஒன்றுக்கும் மேற்பட்ட பயன்பாடுகளைச் சித்தரிக்கும் தேவனுடைய வார்த்தையில் உள்ள பல வசனங்களில் ஒன்றாகும்! இந்த வசனங்கள், நிறைவேறுதலான சாலொமோனுடன் வெவ்வேறு அளவிலான உறவு முறையிலிருந்த நிறைவேறுதலான ஸ்திரீகளின் பல்வேறு குழுக்களைப் பற்றி பெரிதான நிறைவேறுதலில், சாலொமோன் நம்முடைய கர்த்தராகிய இயேசுவை சித்தரிக்கிறார்; சிறிதான நிறைவேறுதலில், அவர் எபிஃபெனி தூதரான ஜாண்சன் போதகரைச் சித்தரிக்கிறார். பெரும்பாலும் பிரதிஷ்டை செய்தவர்களைக் குறிக்க வேதாகமம் ஸ்திரீகளைப் பயன் படுத்துகிறது, எனவே பல்வேறு வகையான குழுக்களான ஸ்திரீகள் நம்முடைய கர்த்தராகிய இயேசுவுடன் வெவ்வேறு அளவில் உறவு முறையிலிருந்த தேவனுடைய ஜனங்களின் வெவ்வேறு வகுப்பார்களைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

1954-க்கு முந்தைய பயன்பாடு: நிறைவேறுதலில் 8-வது வசனத்திற்கு இரண்டு விதமான பயன்பாடுகள் உள்ளன. முதலாவது எபிஃபெனி காலத்தில் சிறுமந்தை மாம்சத்தில் இருந்த காலக்கட்டத்தைக் குறிக்கிறது. அந்தக் காலத்தில், தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த ஜனங்களின் மூன்று வகுப்பார்கள் இருந்தார்கள், சிறுமந்தை, திரள்கூட்டம் மற்றும் வாலிபரான பாத்திரவான்கள். 60 ராஜஸ்திரீகள், திரள்கூட்டத்தின் 60 குழுக்களைக் குறிக்கின்றனர். அவர்கள் வனாந்தரத்திலிருந்த ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்தில் நிறுத்தப்பட்டிருந்த 60 தூண்களிலும், பழைய ஏற்பாட்டின் பல்வேறு வம்சவரலாறுகளில் லேவியரின் குழுக்களின் 60 தலைவர்களிலும், சாலொமோனின் அறைகளைக் காத்துக் கொண்டிருந்த 60 சவுரியவான்களிலும் சித்தரிக்கப்

**கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு! சங்கீதம் 27:14**

படுகிறார்கள் (உன்னதப்பாட்டு. 3:7). 80 மறுமனையாட்டிகள் வாலிபரான பாத்திரவான்களின் 80 குழுக்களைக் குறிக்கின்றனர். தொகையற்ற கன்னிகைகள், பிரதிஷ்டை செய்தவர்கள் என்னும் நிலைப்பாட்டில் உள்ள சிறுமந்தை, திரள்கூட்டம் மற்றும் வாலிபரான பாத்திரவான்களின் தனிப்பட்ட அங்கத்தினர்களைக் குறிக்கின்றனர்.

1954-க்குப் பிந்தைய பயன்பாடு: இரண்டாவது பயன்பாடு 1954-க்குப் பிந்தைய எபிஃபெனி வேலையின் நிகழ்வைக் கையாள்கிறது. அந்தக் காலத்திலும், தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த ஜனங்களில் மூன்று வகுப்பார்கள் இருந்தார்கள். 60 ராஜஸ்திரீகள் திரள்கூட்டத்தின் 60 குழுக்களாக இருந்தனர், ராஜஸ்திரீகள் என்று குறிப்பிடப் படுகிற மெய்ப்பாட்டின் மூலம், அவர்கள் சிறுமந்தைக்கு அடுத்தபடியாக நிறைவேறுதலான சாலொமோனுடன் மிகவும் நெருங்கிய உறவைக் கொண்டிருப்பது காட்டப் படுகிறது. 80 மறுமனையாட்டிகள் வாலிபரான பாத்திர வான்களின் 80 குழுக்களாக இருந்தனர், அவர்கள் நிறைவேறுதலான சாலொமோனுடன் அடுத்ததாக மிகவும் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தனர் என்பது, அவர்கள் மறுமனையாட்டிகள் என்று குறிப்பிடப்படுகிற மெய்ப்பாட்டின் மூலம் காட்டப்படுகிறது. இருப்பினும், இந்த பயன்பாட்டில் தொகையற்ற கன்னிகைகள் தனிநபர்களை அல்ல. மாறாகப் பொதுவாக பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர் வகுப்பைக் குறிக்கின்றனர், அவர்கள் திரள்கூட்டம் மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் போல் குறிப்பிட்ட எண்ணிக்கையைக் கொண்டிருக்கவில்லை.

தேவனுடைய இந்த விலையேறப்பெற்ற வார்த்தைகளில், வேறு சில சுவாரஸ்யமான விஷயங்களும் உள்ளன. திரள்கூட்டத்தின் 60 குழுக்களும் வாலிபரான பாத்திரவான்களின் 80 குழுக்களும் மொத்தமாக 140 தனித்தனி குழுக்களை உருவாக்கவில்லை. திரள்கூட்டத்தின் 60 குழுக்களும் வாலிபரான பாத்திரவான்களின் 80 குழுக்களில் 60 குழுக்களும் ஒன்றாகக் கலந்திருந்தன. இதனால் திரள்கூட்டத்தின் அங்கத்தினர்களையும் வாலிபரான பாத்திரவான்களின் அங்கத்தினர்களையும் உள்ளடக்கிய 60 குழுக்கள் இருந்தன. மீதமுள்ள 20 வாலிபரான பாத்திரவான்களின் குழுக்கள், வாலிபரான பாத்திரவான்களால் மட்டுமே உருவாக்கப்பட்ட குழுக்களாக இருந்தன.

வசனம் 9-ல், புறா என்றும், உத்தமி என்றும், அருமையானவள் ஒருத்தியே என்றும் குறிப்பிடப்படுகிற ஒருத்தி சிறுமந்தையாகும். ராஜஸ்திரீகளும் மறுமனையாட்டிகளும் அவளைப் போற்றியதாக அது கூறுகிறதானது, திரள்கூட்டமும், வாலிபரான பாத்திரவான்களும் சிறுமந்தையைப் புகழ்ந்ததை அல்லது ஆசீர்வதித்ததை அறிவிக்கிறது. சிறுமந்தை மாம்சத்தில் இருந்தபோதே 60 திரள்கூட்ட குழுக்களும் 80 வாலிபரான பாத்திரவான்களின் குழுக்களும் உருவாக்கப்பட்டிருந்ததை இது காட்டுகிறது.

நிகழ்கால பயன்பாடு: மாற்றப்பட்ட நோக்கத்தினாலும், காலம் கடந்தோடியதாலும், இந்த வேதாகம மாணாக்கர் குழுக்களில் பல இப்போது இல்லை. மேலும், திரள்கூட்டம் அதன் ஓட்டத்தை முடித்துவிட்டதால், இன்னும் எஞ்சியிருக்கும் குழுக்கள் நிறைவேறுதலான லேவியர்களான வாலிபரான பாத்திரவான்களைக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. அவ்வாறு சொல்லப்பட்டதினால், சந்தேகத்திற்கு இடமின்றி பல பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் உருவாக்கப்பட்டு, இன்னும் எஞ்சியிருக்கும் குழுக்களின் அங்கத்தினர்களுடன் தொடர்புடையவர்களாக இருந்தார்கள் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

**இப்போது பிரதிஷ்டை செய்யும் பாக்கியம் யேகோவா தேவனிடமிருந்து நமக்குக் கிடைத்த ஒரு மாபெரும் சிலாக்கியமாகும். நேரம் குறைவாக இருக்கிறது! "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" திரும்பக்கொடுத்தல் துவங்கும் வரை மட்டுமே செயல்படும்.**

சாட்சியாக, ரஸல் போதகர் தாமே, வேத வசனங்களுக்கு இணங்க, பிரகார வாயில் மூடப்பட்ட பிறகு, உண்மையிலேயே மனந்திரும்பி இயேசுவைத் தங்கள் இரட்சகராக விசுவாசிப்பவர்கள், தற்காலிகமாக நீதிமானாக்கப் படுகிறார்கள் மற்றும் அவர்களின் தற்காலிகமாக நீதிமானாக்கப்பட்ட நிலை பாளயத்தில் சித்தரிக்கப்படுகிறது என்ற போதனையின் அடித்தளத்தை அமைத்தார். மேலும், இழந்துபோனதைத் திரும்பக்கொடுத்தல் துவங்கும் வரை, உண்மையிலேயே மனந்திரும்பி விசுவாசிகளான அனைவருக்கும் தற்காலிகமான விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுதல் தொடர்ந்து வழங்கப்படும் என்று ஜாண்சன் போதகர் காட்டுகிறார்.

### *பிரதிஷ்டை செய்தலைக் குறித்த ரஸல் போதகரின் விளக்கம்*

**"கர்த்தரைப் பற்றிய அறிவை அடையும் அனைவரும் தங்களை முழுமையாக அவருக்கென்று பிரதிஷ்டை செய்ய வேண்டும்."**

**"முழுமையான பிரதிஷ்டைக்குக் குறைவான எதுவும் ஒருபோதும் ஒழுங்கானதாக இருக்காது."**

**"பிரதிஷ்டை எப்போதும் ஒழுங்குமுறையில் இருக்கிறது."**

காலங்கள் மற்றும் வேளைகளின் தேவைகளுக்கு இசைவிணக்கமாக, மாற்றப்பட்ட நோக்கம். 1954 இலையுதிர் காலத்திற்குப் பிறகு, பிரகாரத்திலிருந்து எபிஃபெனி பாளயத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கு அந்த தற்காலிகமாக விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுதல் தொடர்ந்து செயல்பட்டது, மற்றும் அந்த நேரத்திலிருந்து கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்பவர்களுக்கும் இந்த பாளயத்தில் அது செயல் படுகிறது, மேலும் இழந்துபோனதைத் திரும்பக்கொடுத்தல் துவங்கும் வரை அங்கு தொடர்ந்து செயல்படும் – அதன் பிறகும் கூட, திரும்பக்கொடுத்தல் வகுப்பார் படிப்படியாக உண்மையான நீதிமானாக்கப்படுதலுக்கு வரும்போதும்,

அது மாற்றப்பட்ட நோக்கத்துடன், ஆயிரம் வருட யுக பாளயத்திலும் செயல்படும். 1954 இலையுதிர் காலம் முதல், பிரதிஷ்டை செய்வதற்கான வாய்ப்பு செயல்பட்டு வருகிறது, ஆனால் மாற்றப்பட்ட நோக்கத்துடன், எபிஃபெனி பாளயத்தில் "மனந்திரும்பி விசுவாசிக்கிறவர்களுக்கு," திரும்பக் கொடுத்தல் துவங்கும் வரைக்கும் அங்கு தொடர்ந்து திறந்திருக்கும்; அதன் பிறகும் கூட, மாற்றப்பட்ட மற்றொரு நோக்கத்துடன், ஆயிரம் வருட யுக பாளயத்தில் உள்ள திரும்பக்கொடுத்தல் வகுப்பாருக்குத் திறந்திருக்கும். (சங். 110:3; T 94, பத்தி 3).

ரஸல் போதகர் கூறுகிறபடி, "கர்த்தரைப் பற்றிய அறிவை அடையும் அனைவரும் தங்களை முழுமையாக அவருக்கென்று பிரதிஷ்டை செய்ய வேண்டும். பரம அழைப்பின் கீழ் வந்தாலும் அல்லது மிகுந்த கனம் மற்றும் சிறப்பு வாய்ந்ததாக இல்லாத மற்றொரு பிற்கால அழைப்பின் கீழ் வந்தாலும், இதுவே எப்போதும் பின்பற்ற வேண்டிய ஒரே சரியான வழியாக இருக்கும். முழுமையான பிரதிஷ்டைக்குக் குறைவான எதுவும் ஒருபோதும் ஒழுங்கானதாக இருக்காது." (R1113; ஒப்பிடுக. p-6, பக்கம். 156). பிரதிஷ்டையானது, "எப்போதும் ஒரு ஒழுங்கு முறையில்" இருக்கிறது. (E-4, பக்கம் 420). தேவன் தமது பிரதிஷ்டை செய்த ஊழியர்களை எவ்வாறு பயன்படுத்துகிறார் மற்றும் வெகுமதி அளிக்கிறார் என்பது காலப்போக்கில் தேவனுடைய திட்டம் முன்னேறும்போது கணிசமாக வேறுபடும் அல்லது மாறுகிறது. வேத வாக்கியங்கள் (அடையாளங்கள்) அவருடைய பிரதிஷ்டை செய்த ஊழியர்களை எவ்வாறு சித்தரிக்கின்றனவோ அதற்கேற்ப வேறுபடுகின்றன. நிச்சயமாகவே, தேவன் தம்முடைய பிரதிஷ்டை செய்தவர்களுக்குப் பொருத்தமான நிலைப்பாடு மற்றும் வெகுமதிகளைத் தீர்மானிப்பதற்கான உரிமையைப் பெற்றுள்ளார். ஆனால் நமக்கு, பிரதிஷ்டை எப்போதும் ஒரே மாதிரியானதாகவே இருக்கிறது - அதாவது, வெகுமதியைப் பொருட்படுத்தாமல், விசுவாச உண்மைத்துவத்துடன் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு ஒரு முழுமையான மற்றும் நிறைவான அர்ப்பணிப்பாயிருக்கிறது. ஆனால் எந்தவொரு தளத்திலும் நித்திய ஜீவனைப் பெறப் போகிற அனைவரும் அதைப் பெறுவதற்கு முன்பு பிரதிஷ்டை செய்ய வேண்டும் (கேள்வி/பதில் PT '62, பக்கம் 14- ஐ ஒப்பிடுக).

பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் பிரதிஷ்டைக்குள் பிரவேசிப்பது பரிசுத்தத்தின் வாசலிலோ அல்லது பிரகார வாயிலிலோ சித்தரிக்கப்படவில்லை. பரிசுத்தப் பெரும் பாதையில் அவர்கள் இருக்கவும் முடியாது, அது இன்னும் திறக்கப்படாததால், பிற்காலத்தில் இருப்பதைப் போல இப்போது அங்கு இருக்க முடியாது. இருப்பினும், அவர்கள் பிரதிஷ்டையில் ஒரு இடுக்கமான வாசல் வழியாய்ப் பிரவேசித்து, நெருக்க வழியில் இருப்பதாகவும் கூறலாம், ஏனென்றால் பாவம் இன்னும் மேலோங்கி இருக்கும்போதும், பல இடர்பாடுகள் மற்றும் அதிக எதிர்ப்புகளுக்கு மத்தியில் அவர்கள் பிரதிஷ்டை செய்கிறார்கள், மேலும் அவர்கள் இறுதிவரை இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்றால் (பாளயத்தில்) தங்கள் பிரதிஷ்டையை விசுவாச உண்மைத்துவத்துடன் நிறைவேற்றவேண்டும். பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள், முதல் கவிந்து வருதலுக்குப் பின்னர் மற்றும் 1954-இன் இலையுதிர்காலத்தில் பெசிலியா காலத்தின் தொடக்கத்தின் போது, பிரதிஷ்டை செய்வதால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடையே அவர்களின் இறுதி சுதந்தரத்தைப் பெற மாட்டார்கள்; இருப்பினும், நாம் காட்ட இருப்பது போல், இந்த பிரதிஷ்டை செய்த தேவனுடைய ஊழியர்கள் குவாசி எலெக்ட்களின் (தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரை போன்றவர்கள்) மத்தியில் மிகவும் உயர்ந்த வகுப்பாராக இருப்பார்கள் என்பதை வேத வாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. யுகத்தின் முடிவில் வாலிபரான பாத்திரவான்களுடன் அவர்களுடைய அனுபவங்களில் நெருங்கிய தொடர்புடையவர்களாகப் பங்கு கொள்கிற ஒரு வகுப்பார் இருப்பார்கள், ஆயினும், அவர்களிடமிருந்தும் மற்ற தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமிருந்தும் பிரிந்து அவர்களின் இறுதி சுதந்தரத்தைப் பெறுவார்கள் என்பதை ஜாண்சன் போதகர் வேதாகமத்திலிருந்து முன்வைத்தார், வேத வாக்கியங்களும் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

வருங்கால நாள்: வெளிப்படையாக முன்வைக்கப்பட்ட இதே அடிப்படை போதனையைக் கைக்கொண்டிருந்த ரஸல் போதகர் ஒரு படி மேலே சென்று, திரும்பக் கொடுத்தலுக்கு முந்தைய ஐந்து வகுப்பார்களுக்குப் பின்னரும் கூட, அதாவது ஆயிரம் வருட யுகராஜ்யம் அதன் பூமிக்குரிய பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட பிறகும் கூட, தற்காலிக நீதிமானாக்கப்படுதல் தொடர்கிறது என்பதை மிகவும் தர்க்கரீதியாக தெளிவுபடுத்தினார். அவரது எழுத்துக்களிலிருந்து பின்வருவனவற்றை நாம் கவனிக்கிறோம்: "உலகத்தாரின் நீதிமானாக்கப்படுதல் ஒரு நொடிப் பொழுதில் இருக்காது, மாறாக ஆயிரம் வருடங்களின் போது – அதாவது, மில்லினியத்தின் போது படிப்படியாக முன்னேற்றமடையும். மத்தியஸ்தர் மற்றும் அவருடைய ராஜ்யத்தின் மூலம் உலகமானது **தற்காலிகமாக நீதிமானாக்கப்பட்டதாக** [வலியுறுத்தல் எங்களுடையது] கூறலாம், ஆனால் அவர்களின் நீதிமானாக்கப்படுதல் ஆயிரம் வருட யுகத்தின் முடிவில் அவர்கள் முழுமையான பரிபூரணத்தில் மட்டுமே நிறைவேற்றமடையும், அவர்கள் பிதாவிடம் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்." (R5959). ஆனால் அடுத்த யுகத்தில் உலகத்தார், அந்த ஆயிரம் வருடங்கள் முழுவதும் பரிபூரணத்தை நோக்கி, முன்னேறி, முன்னேறி வருவார்கள், ஒவ்வொரு நாளும் அவர்கள் அதிக நீதிமானாக்கப்பட்டு, அதிக நீதிமானாக்கப்பட்டு, மேலும் அதிக நீதிமானாக்கப்படுவதுடன், அவர்கள் ஒவ்வொரு நாளும் ஏறத்தாழ, இன்னும் செம்மையாகிக் கொண்டே இருப்பார்கள். எனவே அவர்கள் படிப்படியாக நீதிமானாக்கப்படுதலை நோக்கிச் செல்வார்கள், மேலும் அக்காலத்தில் ஒவ்வொருவரும் சரியான வழியில் இருப்பார்கள், மேலும் கர்த்தருடன் இணக்கமாக இருக்க

முயற்சிப்பவர்கள் *தற்காலிகமாக நீதிமானாக்கப்பட்டவர்கள்* [சாய்வெழுத்து நம்முடையது] என்று கூறப்படுவார்கள்" (போதகர் ரஸல் கூறியது என்ன? பக்கம் 402-ன் கீழ்ப்பகுதியில்).

**உலகத்தாரின் நீதிமானாக்கப்படுதல் மில்லினியத்தின் ஆயிரம் வருடங்களின் போது நிகழும். அவர்களின் படிப்படியான நீதிமானாக்கப்படுதல் "ஆயிரம் வருட யுகத்தின் முடிவில் அவர்களுடைய கிரியைகளின் மூலம் முழுமையான பரிபூரணத்தை அடையும் போது "அவர்கள் பிதாவிடம் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் ஏற்றுக் கொள்ளப்படும் போது" மட்டுமே நிறைவேற்றப்படும்."**

R5959, பத்தி 6 மற்றும் கேள்வி புத்தகத்தின் பக்கம். 402 ன் கீழ்ப்பகுதி முதலியவற்றிலிருந்து ரஸல் போதகரின் உறுதிப்படுத்தும் சாட்சியின்படி, "ஆயிரம் வருட யுக ஆட்சியின் முடிவில் அவர்களின் முழுமையான பரி-பூரணத்தில் மட்டுமே நிறைவேற்றப்படும்," உலகத்தார் அவர்களுடைய உண்மையான நீதிமானாக்கப்படுதலுக்கு படிப்படியாக வந்து கொண்டிருக்கும் அந்தக் காலகட்டத்தில் அவர்கள் "அப்போது தற்காலிகமாக நீதிமானாக்கப் பட்டதாகச் சொல்லலாம்." அப்போது "அவர்கள் படிப்படியாக நீதிமானாக்கப்படுதலை அடைந்துகொண்டிருப்பதால், அக்காலத்தில் சரியான வழியில் இருப்பவர்களும், மேலும் கர்த்தருடன் இணக்கமாக இருக்க முயற்சிப்பவர்கள் ஒவ்வொருவரும் தற்காலிகமாக நீதிமானாக்கப்பட்டவர்கள் என்று கூறப்படுவார்கள்."

மேலும், PT 63, பக்கம் 44,45-ல் உள்ள ரஸல் போதகரின் இந்த இரண்டு அறிக்கைகளையும் குறிப்பிட்டு விசுவாசத்தினால் தற்காலிகமாக நீதிமானாக்கப்படுதலின், செயல்படுதல் இழந்துபோனதைத் திரும்பக்கொடுக்கும் காலத்திற்குப் பொருந்தாது என்பதை விளக்கிக் காட்டினோம், ஏனெனில் ''தற்காலிகமாக நீதிமானாக்கப்படுதலானது ஆயிரம் வருட யுகத்திலும் கூட செயல்படும் என்றும், அது தற்காலிகமாக உண்மையான நீதிமானாக்கப்படுதலின் அர்த்தத்தில் செயல்படும்'' என்றும் நாங்கள் கூறினோம். நீதிமானாக்கப்பட்டதாக எண்ணப்படுதலுக்கும் உண்மை-யான நீதிமானாக்கப்படுதலுக்கும் இடையே, - அதாவது, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலுக்கும் கிரியை-களினால் நீதிமானாக்கப்படுதலுக்கும் இடையே ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. தற்காலிகமாக (விசுவாசத்தினால்) நீதிமானாக்கப்படுதல் "திரும்பக்கொடுத்தல் துவங்கும் வரை" மட்டுமே செயல்படும்; அதன் பிறகு, புதிய உடன் படிக்கையின் கீழ், எந்த தற்காலிகமான (விசுவாசத்தினால்) நீதிமானாக்கப்படுதலும் இருக்காது - உண்மையான நீதிமானாக்கப்படுத்தலுக்கான பரீட்சை அப்போது கிரியை-களாக இருக்கும் (உலகத்தார் "தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்" - வெளி. 20:12), ஆனால் இப்போது தற்காலிக நீதிமானாக்கப் படுத்தலுக்கான பரீட்சை விசுவாசமாக இருக்கிறது. (PT '68, பக்கம் 31).

போதகர்கள் ரஸல், ஜாண்சன் மற்றும் ஜாலி ஆகியோரின் போதனைகள் மூலம் நமக்குக் கொடுக்கப் பட்டுள்ள ஆசீர்வாதத்திற்காக யேகோவா தேவனுக்கு நமது பயபக்தியைக் காண்பிக்க சிறிது நேரம் ஒதுக்குவோமாக.

**திரும்பக்கொடுத்தல் துவங்கிய பிறகு, உண்மையான நீதிமானாக்கப்படுதலுக்கான உலகத்தாரின் பரீட்சை ஒருவரின் கிரியைகளால் முன்னேறுவதாய் இருக்கும் (உலகத்தார் ''தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.'' – வெளி. 20:12) பரிசுத்த பெரும்பாதைக்குள் பிரவேசிப்பதற்கு பிரதிஷ்டை அவசியமாயிருக்கும்.**

***

## நினைவுகள்

*விடுமுறை நாட்கள் நினைவுகளுக்கான நேரம், நம் இருதயங்களில் எப்போதும் பொக்கிஷமாக வைத்திருக்கும் காட்சிகளை நினைவுகூருவதற்கான நேரம்; அன்பு மற்றும் தாராள மனப்பான்மைக்கான நேரம்; நம்முடைய பரலோகப் பிதாவும் மீட்பருமானவர் நமக்கு அருளிய அனைத்திற்காகவும் எப்போதும் நன்றி தெரிவிக்கும் நேரம்.*

*விடுமுறை காலத்திலும் வருகிற வருடத்திலும் கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் உங்களோடிருப்பதாக.*

*நீங்கள் அவர் மீது வைக்கும் நம்பிக்கையினால், உங்கள் இருதயங்கள் சமாதானத்தினால் நிரம்பியிருப்பதாக.*



**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629


**FOR PRIVATE CIRCULATION ONLY**